Registered as Newspaper

# உதயன்

| சுடர் : 36<br>கதிர் : 034 | புதன்கிழமை | மார்கழி 15 ஆம் நாள்<br>30 டிசெம்பர் 2020 | வள்ளுவர் ஆண்டு 2051 |
|---|---|---|---|

பக்கங்கள்: 20 விலை : ரூ.30

செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## யாழில் நேற்று எண்மருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், டிசெ.30

யாழ்ப்பாணத்தில் நேற்று 8 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்கள் மருதனார்மடம் 19 ➤

## யாழ்.மாநகர சபையின் அடுத்த மேயர் யார்?

## ஆனோல்ட் - மணிவண்ணன் இன்று பலப்பரீட்சை!



யாழ்ப்பாணம், டிசெ.30

யாழ்ப்பாண மாநகர சபையின் முதல்வர் தெரிவுக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மீண்டும் இ.ஆனோல்ட் நிறுத்தப்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்த் 19 ➤

# தனிப் பிராந்தியமா? வாய்ப்பே இல்லை

### கூட்டமைப்பின் யோசனைக்கு முட்டுக்கட்டை தமிழீழத்துக்கான முயற்சி எனக் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெம்பர் 30

இலங்கையில் தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பான விடுதலைப்புலிகளின் தமிழீழக் கனவுடன் தொடர்ந்து செயற்பட்டுவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நிபுணர்கள் குழுவுக்குச் சமர்ப்பித்துள்ள யோச 19 ➤

## அரசமைப்பு யோசனை தமிழரின் அபிலாஷை!

### எனினும் அரசில் நம்பிக்கை இல்லை என்கிறார் சம்பந்தன்

கொழும்பு, டிசெ.30

தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய முன்மொழிவுகளைத்தான் புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நிபுணர்கள் குழுவிடம் சமர்ப்பித்துள்ளோம். 19 ➤

## நல்லூர் பிரதேச சபை திரிசங்கு நிலையில்!

### இன்று தெரியும் முடிவு

யாழ்ப்பாணம், டிசெ.30

நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் பதவிக்கு உறுப்பினர் கு.மதுசுதனை நிறுத்துவதற்கு ஓரளவு இணக்கம் காணப்பட்டுள்ளது என்றும், அவர் தனக்குரிய ஆதரவை இன்று காலை 19 ➤

## மாகாணசபை முறைமையை தக்கவைக்க அரசு தீர்மானம்

கொழும்பு, டிசெ.30

மாகாணசபை முறைமை இல்லாதொழிக்கப்பட வேண்டும் என கடும்போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புகளின் பிரதிநிதிகளும், 19 ➤

## தவிசாளர் பதவியிலிருந்து விலகுகின்றார் நிரோஷ்?

யாழ்ப்பாணம், டிசெ.30

நல்லூர் பிரதேச சபைத் தவிசாளராக கு.மதுசுதனை நிறுத்துவதற்காக, கோப்பாய் பிரதேச சபைத் தவிசாளர் பதவி விலக்கப்படவுள்ளார் என்று தெரியவருகின்றது.

நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் யார் 18 ➤

## அருவியாற்றில் குளித்த கிராம அலுவலர் மாயம்



மன்னார், டிசெ.30

மன்னார் அருவியாற்றில் குளித்த கிராம அலுவலர் நீரில் மூழ்கிக் காணாமல் போயுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று மதியம் நடந்துள்ளது. 18 ➤

### நிலைவர அறிக்கை

### யாழ் மாவட்டம் கொவிட் -19

29 டிசம்பர் 2020 / இரவு 10.00 மணி

மொத்த நோயாளிகள் 124 (01.12.2020 தொடக்கம்)

| | |
|---|---|
| சங்கானை | 04 |
| சாவகச்சேரி | 01 |
| காரைநகர் | 00 |
| கரவெட்டி | 00 |
| ஊர்காவற்றுறை | 01 |
| கோப்பாய் | 04 |
| மருதங்கேணி | 00 |
| யாழ்ப்பாணம் | 00 |
| நல்லூர் | 08 |
| பருத்தித்துறை | 04 |
| சண்டிலிப்பாய் | 18 |
| தெல்லிப்பளை | 34 |
| உடுவில் | 50 |
| வேலணை | 00 |

கடந்த 24 மணி நேரத்தில் 08

உடுவில் 06
தெல்லிப்பளை 02

மொத்த பி.சி.ஆர் பரிசோதனைகள் 216

இறப்புக்கள் 00

கொவிட்-19 கட்டுப்பாட்டுச் செயலணி
பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, யாழ்ப்பாணம்

## உதயனுக்கு எதிராக வழக்கு; அரசு வாபஸ் பெறவேண்டும்!

### தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை கண்டனம்

யாழ்ப்பாணம், டிசெ.30

உதயன் பத்திரிகைக்கு எதிரான வழக்கு ஜனநாயகத்துக்கு எதிரானது. இப்போதைய அரசு உதயன் பத்திரிகைக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்தமையைக் கண்டிக்கின்றோம் என்று தெரிவித்துள்ளார் தமிழரசுக் கட்சியின் தலைவரான மாவை சோ.சேனாதிராசா.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் ஒளிப்படத்தையும், சொற்களையும் பிரசுரித்தமைக்கு எதிராக யாழ்ப்பா 18 ➤

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுனின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.68,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
அதிகபட்ச இரகசியத் தன்மை
சிநேகபூர்வமான உடனடி சேவை
சிறந்த பாதுகாப்பு
இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
011 200 88 88
செலான் வங்கி

Mobitel Master unlimited
உங்களுக்கு விருப்பமான
UNLIMITED
பக்கேஜைத் தெரிவு செய்யுங்கள்
அழையுங்கள் 1717
UNLIMITED CALLS மாதாந்தம் ரூபா. 1500/- மட்டுமே
UNLIMITED CALLS & DATA மாதாந்தம் ரூபா. 3,999/- மட்டுமே
Sri Lanka Telecom Mobitel

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கடமைகளை சீராகச் செய்வதில்லை


## வவுனியா மாவட்ட பிரதி சுகாதார மருத்துவ அதிகாரி துஸ்யந்தன் குற்றச்சாட்டு

வவுனியா, டிசெ.30
தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் அவர்களது கடமைகளை சீராகச் செய்வதில்லை என்று வவுனியா மாவட்ட பிரதி சுகாதார மருத்துவ அதிகாரி துஸ்யந்தன் குற்றம் சாட்டியுள்ளார்.
வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கொரோனாத் தொற்றை கட்டுப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடலின்போதே அவர் இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
வவுனியா மாவட்டத்தில் கொரோனாத் தொற்று சந்தேகத்தின் அடிப்படையில் தனிமைப்படுத்தப்பட்டவர்களை கிராம அலுவலர்கள், சுகாதார பரிசோதகர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு அறிக்கைகளை வழங்குகின்றனர்.
ஆனால் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் அவர்களை பார்வையிடச் செல்வதில்லை. இவ்வாறான உத்தியோகத்தர்களின் அலட்சியமான செயற்பாடுகள் தொடர்பாக முழுமையான விவரம் என்னிடம் உள்ளது என்றார்.
இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எழுத்து மூலம் கடிதம் வழங்குவேன் என வவுனியா மாவட்டச் செயலர் எஸ்.எம்.சமன் பந்துலசேன உறுதியளித்தார். (ஐ-18)

# துணைக் கொரோனா பரவல்கள் உருவாகும்

## சுகாதார அதிகாரிகள் சம்மேளனம் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 30



**பண்டிகைக் காலத்தில் மேல் மாகாணத்திலிருந்து வெளியேறியவர்கள் மத்தியிலிருந்து கொரோனா நோயாளிகள் கண்டறியப்படுகின்றனர், இதன் காரணமாக வேறு சில மாகாணங்களில் துணைக் கொரோனா பரவல்கள் உருவாகின்றன என்று பொதுச் சுகாதார அதிகாரிகள் சம்மேளனம் எச்சரித்துள்ளது.**

இது தொடர்பில் சம்மேளனத்தின் செயலாளர் மகேஸ் பாலசூரிய மேலும் தெரிவித்ததாவது;
மத்திய மாகாணம், கிழக்கு மாகாணம் மற்றும் வடமேற்கு மாகாணத்தில் இருந்து நோயாளிகள் கண்டறியப்படுகின்றனர். கொழும்பு மாவட்டத்தில் இருந்து விடுமுறை காலத்தில் பயணம் செய்தவர்கள் மத்தியில் இருந்தே அந்த மாகாணங்களில் நோயாளிகள் கண்டறியப்படுகிறார்கள்.
இதனைத் தடுப்பதற்காகவே மேற்கு மாகாணத்திலிருந்து ஏனைய மாகாணங்களுக்கான போக்குவரத்துக்களுக்கு தடையை விதிக்குமாறு ஏற்கனவே நாம் அதிகாரிகளிடம் கோரியிருந்தோம் - என்றார். (ஐ-இ)

### ஐவருக்கு கொரோனா

ரம்புக்கன கொத்தனவத்த கிராம சேவைப் பிரிவில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவரின் குடும்பத்திலுள்ள மூன்று பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டது.
அத்துடன், அருகில் வசிக்கும் பாடசாலை மாணவர்கள் இருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர். (ரி5)

# முல்லை. நகரச் சந்தையில் அதிக விலையில் கடலுணவு

## பாவனையாளர் விசனம்

முல்லைத்தீவு, டிசெ.30
முல்லைத்தீவு நகரச் சந்தையில் கடல் உணவுகள் கூடுதல் விலையில் விற்கப்படுகின்றன என்று பாவனையாளர்கள் விசனம் தெரிவித்துள்ள னர்.
இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;
முல்லைத்தீவு கடலில் பிடிக்கப்படுகின்ற பெருமளவு கடல் உணவுகள் தென்னிலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆனால் மாவட்ட மக்களின் கடல் உணவுத் தேவை நிறைவு செய்யப்படுவதில்லை.
முல்லைத்தீவு நகரச் சந்தையில் கடல் உணவுகள் கூடுதல் விலையில் விற்கப்படுகின்றன என்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலும் சுட்டிக்காட்டப்பட்டது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை. நகரச் சந்தையிலேயே கூடிய விலையில் அவை விற்பனை செய்யப்படுவதால், கிராமங்களுக்குச் சென்று விற்பனை செய்யும் வியாபாரிகள் இன்னும் கூடுதல் விலையிலேயே அவற்றை விற்பனை செய்கின்றனர். எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தவேண்டும் - என்றனர். (ஐ-ரி2)



# பாலம் அமைத்து தருமாறு பொதுமக்கள் கோரிக்கை!!

வவுனியா,டிசெ.30
வவுனியா நொச்சி மோட்டை புதிய சின்னக்குளம் வீதியில் பாலம் அமைக்கப்படாமையால், மழைகாலங்களில் அப்பாதையூடாக போக்குவரத்தை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று பொதுமக்கள் கவலை தெரிவித்தனர்.
நொச்சிமோட்டை குளம் தனது முழுக் கொள்ளவை எட்டியுள்ள நிலையில் அதன் மேலதிக நீர் சுருங்கை வழியாக வெளியேறி பாதையூடாகவே செல்கிறது.
இதன்போது பாதையில் 4 அடிக்கு மேல் நீர் நிரம்பிக்காணப்படும். இவ்வாறான நிலையில் போக்குவரத்துக்காக வீதியைப் பயன்படுத்தும் கிராம மக்கள் மிகுந்த சிரமத்துக்கு மத்தியிலேயே தமது பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர்.
ஒவ்வொரு வருடமும் மழைகாலங்களின் போது குளம் நிறைந்தால் இந்த வீதியால் பயணிக்க முடியாத நிலை ஏற்படுகின்றது. பாடசாலை மாணவர்கள் மற்றும் நோயாளர்கள் கூட இந்த பாதையூடாகவே பிரதான வீதியை சென்றடைகின்றனர்.
எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் பாலம் அமைக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-110)

### வாகனங்களுக்கு இடையில் சிக்குண்டு சிப்பாய் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 30
பூஸா கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படை சாரதி இரு வாகனங்களுக்கிடையில் ஒருவர் சிக்குண்டு நேற்று உயிரிழந்தார். வாகனத்தை சுத்தம் செய்து கொண்டிருந்தபோது குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.
நாகொடை கெப்பட்டியகொட பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய கடற்படை வீரரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ரி5-இ)

### ரயில் விபத்தில் பிக்கு உயிரிழப்பு

கொழும்பு, டிசெ.30
கொழும்பிலிருந்து காலி நோக்கி பயணித்துக் கொண்டிருந்த அதிவேக ரயிலில் மோதி பிக்கு ஒருவர் உயிரிழந்துள்ளார்.
ரயகஹவ மற்றும் அக்குறளவுக்கு இடைப்பட்ட பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
இந்தச் சம்பவம் எல்பிட்டிய கணேகொட புராதன ரஜமகா விகாரையைச் சேர்ந்த 30 வயதுடைய பிக்குவே இவ்வாறு உயிரிழந்தார். மேற்படி சம்பவம் தற்கொலையா அல்லது விபத்தா என்பது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஐ-இ)

### விலங்குகளின் அத்துமீறலால் விவசாயிகள் நெருக்கடியில்

கொழும்பு, டிசெ.30
விவசாயப் பயிர்களுக்கு விலங்குகளால் ஏற்படும் சேதம் முறையாகக் கட்டுப்படுத்தப்படும் வரை, உள்நாட்டிலேயே தன்னிறைவான உணவுப்பொருள் உற்பத்தி என்பது அடையப்பட முடியாத இலக்காகவே இருக்கும் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார். மேலும், யானை உள்ளிட்ட சில வன விலங்குகள், பறவைகள் மற்றும் படைப்புழு ஆகியவற்றின் தாக்கத்தால் விவசாயிகள் பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பேசியிருப்பினும் கூட, தற்போது இது குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது என தனது ருவிட்டர் பதிவில் தெரிவித்துள் ளார். (ரு)

### துப்பாக்கியுடன் ஒருவர் கைது



கொழும்பு, டிசெ. 30
அஹுங்கல்ல, பலபிட்டிய பிரதேசத்தில் 34 வயதுடைய நபரொருவர் துப்பாக்கியுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார். பொலிஸ் விசேட அதிரடிப்படை மற்றும் ஜயவர்தனபுர முகாமின் அதிகாரிகள் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பில் இந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை பலபிட்டிய நீதிவான் நீதிமன்றில் நேற்று பொலிஸார் முன்னிலைப்படுத்தவுள்ளனர். (ச-இ)

# புதிய அரசமைப்பு வரும்வரை மாகாணத்தேர்தல் வேண்டாம்!

## இராஜாங்க அமைச்சர் வலியுறுத்து

**கொழும்பு, டிசெ. 30**

**புதிய அரசமைப்பு இயற்றப்படும்வரை மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தாமல் இருப்பதே சிறந்த முடிவாக அமையும் என்று இராஜங்க அமைச்சர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.**

மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'கடந்த ஆட்சியின்போது மாகாண சபைகள் மற்றும் உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் பிற்போடப்பட்டன. இதற்கு எதிராக எமது அணியினர் விமர்சனங்களை முன்வைத்தனர் என்பதுடன் திட்டமிட்ட அடிப்படையில் தேர்தல் பிற்போடப்படுகின்றது எனவும் சுட்டிக்காட்டினர். அப்படியானால் தற்போது தேர்தலை நடத்தும் பொறுப்பு எமது அரசுக்கு இருக்கின்றது. இது பற்றியே அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டிருக்கலாம்.

அத்துடன் மாகாணசபை முறைமை தொடர்பில் பல கோணங்களில் கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக எமது அணிக்கு ஆதரவு வழங்கியவர்களில் சிலர், மாகாண சபை முறைமை வெள்ளை யானை எனவும், அது இந்தியாவால் பலவந்தமாக திணிக்கப்பட்டது எனவும் வாதிட்டுவருகின்றனர். தற்போது புதியதொரு அரசமைப்பை இயற்றும் பணி இடம்பெற்றுவருகின்றது. தேர்தல் முறைமை குறித்து அதில் முடிவு எடுக்கப்படும். நிர்வாக முறைமையும் தீர்மானிக்கப்படும். எனவே, புதிய அரசமைப்பு இயற்றப்படும் வரை தேர்தலை நடத்தாமல் இருப்பதே சிறப்பு' என்றார். (ம-44)

---

கொரோனா தடுப்புப் பாணி விவகாரம்

## தனிக் கொத்தணி உருவெடுக்கிறதா?

### மேலும் ஐவருக்குத் தொற்று

கொழும்பு, டிசெ. 30

கேகாலையில் மருத்துவர் தம்மிக பண்டாரவால் கண்டுபிடிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் கொரோனா தடுப்பு பாணியைப் பெற்று அருந்துவதற்காக திரண்ட மக்கள் கூட்டத்தில் இருந்து கொரோனா அலையொன்று உருவாகும் சாத்தியம் ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

கேகாலை ஆயுள்வேத மருத்துவர் தம்மிக பெர்னான்டோ அண்மையில் பாணியொன்றை அறிமுகப்படுத்தினார்.

மருந்தை 5 ஆயிரம் பேருக்கு இலவசமாக வழங்கவுள்ளேன் என்று அறிவித்தார் தம்மிக. இதையடுத்து அவரின் வீட்டுக்கு முன்னால் சுமார் 20 ஆயிரம் பேர் வரையில் மக்கள் பெருந்திரளாகக் கூடினர். அவ்வாறு ஒன்றுகூடியவர்களில் சிலருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகப்பிந்தியதாக நேற்று மேலும் ஐவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம)

---

அளம்பில் தங்கபுரம் பகுதியில்

## கட்டுத்துவக்குடன் இளைஞன் கைது!

முல்லைத்தீவு, டிசெ. 30

முல்லைத்தீவு அளம்பில் தங்கபுரம் பகுதியில் கட்டுத்துவக்குடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவுக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த இளைஞனை நீதிமன்றில் முற்படுத்தும் நடவடிக்கைகள் முன் னெடுக்கப்பட் டுள்ளன. (ம-19)

---

## தடுப்பூசிகள் குறித்து பெப்ரவரியில் முடிவு!

### சுகாதார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 30

இலங்கையில் பயன்படுத்தப்படவுள்ள கொரோனா தடுப்பூசி தொடர்பில் எதிர்வரும் பெப்ரவரி மாதத்துக்குள் இறுதி முடிவு எடுக்கப்பட்டு, நாட்டு மக்களுக்கு அது தொடர்பில் அறிவிக்கப்படும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'உலகில் பயன்பாட்டுக்கு வந்துள்ள கொரோனாத் தடுப்பூசிகள் தொடர்பில் கடந்த ஒக்ரோபர் மாதம் முதல் நிபுணர்கள் குழுவொன்று தீவிரமாக ஆராய்ந்துவருகின்றது. இவற்றில் எந்தத் தடுப்பூசி இலங்கைக்கு பொருத்தமானது பயன்படுத்தக்கூடியதாக இருக்கும் என்பது தொடர்பில் அந்தக் குழுவால் அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் தடுப்பூசி விவகாரத்தைக் கையாள்வதற்கென ஜனாதிபதி செயலணியொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இராஜதந்திர மட்டத்திலான நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன. எனவே, எந்தத் தடுப்பூசியை இலங்கைக்கு தருவிப்பது, எவ்வளவு கொண்டுவருவது, எந்த வயது கட்டமைப்பினருக்கு முதலில் பயன்படுத்துவது என்பது தொடர்பான தகவல்களை எதிர்வரும் ஜனவரி அல்லது பெப்ரவரி மாதத்துக்குள் நாட்டு மக்களுக்கு அறிவிக்கக்கூடியதாக இருக்கும்' என்றார். (ம-44)

---

## இல்வாரையை பார்வையிட தடைவிதிப்பு



சாவகச்சேரி.டிசெ.30

சாவகச்சேரி கனகம்புளியடி வீதியில் உள்ள இல்வாரைக் குளத்திலிருந்து வாய்க்கால் வழியாக வெளியேறும் நீரோட்டத்தை மக்கள் பார்வையிட சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினரால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மரங்களுக்கு நடுவே இயற்கை அழகுடன் காணப்படும் நீரோட்டத்தை பார்வையிட யாழ்ப்பாண மாவட்டத்தின் பல பகுதிகளைச் சேர்ந்த மக்கள் வாகனங்களில் வருகை தருகின்றனர். பார்வையிட வருகின்ற மக்கள் சுகாதார விதிமுறைகளை மீறும் வகையில் முகக்கவசம் அணியாமலும், சமூக இடைவெளி பேணாத நிலையிலும் காணப்படுகின்ற னர்.

கொரோனாத் தொற்று காரணமாக சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றுமாறு சுகாதார அதிகாரிகளால் அறிவுறுத்தப்பட்டும் அதனை பொதுமக்கள் செவிமடுக்கவில்லை.

இதனால் இப் பகுதிகளில் மக்கள் ஒன்றுகூடுவது தடைசெய்யப்பட்டுள்ளது எனவும், மீறுவோர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

---

## வாரத்தில் ஒரு நாளாவது உள்ளூர் ஆடை அணிக!

கொழும்பு, டிசெ. 30

2021ஆம் ஆண்டுமுதல் வாரத்தில் ஒரு நாளாவது அரச ஊழியர்கள் பற்றிக் ஆடைகளை அணிய வேண்டும் என இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

உள்ளூர் ஆடை உற்பத்தியாளர்களைப் பாதுகாத்தல், உள்நாட்டில் ஆடைத் துறையில் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் வெளிநாடுகளில் உள்ள ஆடைகளுக்கான அந்நிய செலாவணியை ஆண்டுதோறும் அதிகரித்தல் போன்ற நோக்கங்களுக்காக இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

'3 மில்லியன் அரச ஊழியர்களும் தமது ஆதரவை இதற்காக வழங்க வேண்டும்' என்று இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர மேலும் கோரிக்கை விடுத்தார். (ம-44)

---




## கல்முனையின் பல இடங்கள் தனிமைப்படுத்தப்பட்டன

கல்முனை, டிசெ.30

கல்முனை செயலான் வீதியிலிருந்து கல்முனை வாடி வீட்டு வீதி வரை உள்ள அனைத்து பிரதேசங்களும் மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. கல்முனை பொதுச்சந்தை, கல்முனை பஸார் மற்றும் கல்முனை பிரதான வீதி ஆகியவற்றிலுள்ள வர்த்தகர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் 32 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதிகளில் போக்குவரத்து செய்வது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதுடன் கல்முனை பொலிஸார், இராணுவத்தினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (வ-இ)

---

## வெடிபொருள் மாயம்: விசாரணை ஆரம்பம்

மாவனெல்ல, டிசெ.30

மாவனெல்ல மொல்லிக்கொட பிர தேசத்தில் கற்குவாரியில் இருந்த வெடிபொருள் திடீரென காணாமற்போன விவகாரம் தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவின் 5 சிறப்பு குழுக்கள் விசாரணையை ஆரம்பித்துள்ளன.

கடந்த 22ம் திகதி நடந்த இச் சம்ப வம் தொடர்பாக சந்தேகநபர் ஒருவர் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்நிலையில் குறித்த பகுதிக்கு சிறப்பு விசாரணைப் படை விஜயம் செய்துள்ளது.

வெடிபொருள் காணாமற்போன சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ந)

# சட்டச்சிக்கல் தீர்ந்த பின்னரே தேர்தல் குறித்துத் தீர்மானம்

கொழும்பு, டிசெ. 30
மாகாண சபைத் தேர்தல் சட்டத்தில் காணப்படும் சிக்கல்களுக்கான தீர்வு காணப்பட்டதன் பின்னர் தேர்தலை நடத்துவது தொடர்பில் தீர்மானிக்கப்படும் எனத் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சட்டத்தில் காணப்படும் சிக்கல்கள் தொடர்பில் நாடா ளுமன்றத்தினூடாகவே தீர்வு காணப்பட வேண்டும்.

அது தீர்க்கப்பட்ட தன் பின்னர் தேர்தலை நடத்துவது தொடர்பில் பரிசீலிக்கப்படும்.

மாகாண சபைத் தேர்தலை நடாத்துவதாயின் சுமார் 4 ஆயி ரம் மில்லியன் ரூபா செலவாகும் என ஆணைக்குழு வின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா மேலும் தெரிவித்தார். (ம)

## கொரோனா பெருந்தொற்று
# 20 பேருக்குத் தற்போது அதிதீவிர சிகிச்சைகள்!

கொழும்பு, டிசெ. 30
கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள 20 பேர் தற்போது அதி தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

நிலைமைகளை சமாளிக்கும் வகையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் 70 கட்டில்கள் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது மருத்துவமனைகளில் சுமார் 8 ஆயிரத்து 100 பேர் சிகிச்சைபெற்று வருகின்றனர். நோயாளர்களைக் கையாள்வதற்காக 11 ஆயிரத்து 575 கட்டில்கள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-இ)




# 'மாஸ்க்' பயன்பாட்டால் உணர்ச்சிகள் அழியுமாம்!
## ஆய்வில் தகவல்

கொழும்பு, டிசெ.30
முகக்கவசம் அணிவதால் ஒருவருடைய உணர்ச்சிகளை தெரிந்துகொள்ளமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன், நன்றாக பழகியவர்களைக்கூட உடனடியாக அடையாளம் காண முடியவில்லை என்று ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முகக்கவசங்கள் அணிவதால் தொற்றிலிருந்து காத்துக் கொள்ள முடியும் என்பதைத் தாண்டி இதனால் தனிப்பட்ட முறையில் ஒருவருக்கு என்ன சிக்கல்கள் ஏற்படுகிறது என்று கனடாவின் பென்குரியன் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஆய்வில் சில சுவாரசியத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

முகக்கவசத்தால் முக உணர்ச்சிகளை தெரிந்துகொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பொதுவாக கண்களைப் பார்த்து பேசினாலும் முக பாவனைகளை முழுமையாக காண முடிவதில்லை. இதனால் தகவல் தொடர்பும் சற்று பாதிக்கப்படுகிறது.

முக அங்கீகாரத்தில் புதிய பரிணாமம் ஏற்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 100 பேர் கொண்ட ஒரு பெரிய குழுவுடன் ஒன்லைனில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. முகக்கவசம் அணிந்த ஒருவரை அடையாளம் காண்பதற்கான விகிதம் 15 வீதத்தால் குறைந்துள்ளது என ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். (ஐ-இ)

# 21 வயதில் மேயரான ஆர்யாவுக்கு நாமல் வாழ்த்து



கொழும்பு, டிசெ.30
கேரளாவின் திருவனந்தபுரம் நகரின் மேயராக இளம் வயதில் பதவி ஏற்றுக்கொண்டுள்ள 21 வயது பெண் ஆர்யா ராஜேந்திரனுக்கு அமைச்சர் நாமல் ராஜபக்ச தனது ருவிற்றர் பக்கத்தில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஆர்யாவின் வெற்றிக் கதை பல இளைஞர், யுவதிகளுக்கு முன்னுதாரணமாக அமையும் எனவும், குறிப்பாக பெண்கள் ஊக்கமடைவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். திருவனந்தபுரம் மாநகரசபை தேர்தலில் சீ.பி.ஐ கட்சி வெற்றியீட்டியதுடன், மேயர் பதவிக்கு ஆர்யாவை நியமிக்கத் தீர்மானித்தது. இதன் அடிப்படையில் ஆர்யா நேற்று பதவியைப் பொறுப்பேற்றுக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)

# பல்பொருள் அங்காடி ஊழியருக்கு தொற்று
*35 பணியாளர்கள் தனிமையில்*

மட்டக்களப்பு, டிசெ.30
மட்டக்களப்பு நகரிலுள்ள பல்பொருள் அங்காடியொன்றில் பணிபுரியும் பெண் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அதையடுத்து அங்காடி பூட்டப்பட்டு அதன் 35 பணியாளர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ள னர். அங்கு வருகை தந்தவர்களையும் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மயூரன் தெரிவித்துள்ளார்.

ஆரையம்பதியில் எழுமாறாக செய்யப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் குறித்த பல்பொருள் அங்காடியில் கடமையாற்றும் பெண் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (வ-இ)

# இரணைமடு குளத்துக்கு நீர்வரத்து குறைந்தது!

கொழும்பு, டிசெ. 30
இரணைமடு குளத்துக்கான நீர் வருகை தற்போது குறைந்துள்ள மையால் வான் கதவுகள் திறக்கப்படாது என நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்றுப் பகல் 12 மணிக்கு பின்னர் கதவுகள் திறக்கப்படலாம் எனவும், மக்களை அவதானமாக செயற்படுமாறும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-6)

# சிகரெட் துண்டால் உயர்நீதிமன்றில் தீ
## இதை புறந்தள்ள முடியாது என்கிறது இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கை



கொழும்பு, டிசெ. 30
பயன்படுத்தப்பட்ட சிகரெட் துண்டாலேயே உயர்நீதிமன்ற கட்டடத் தொகுதியில் தீ பரவியது என்று கூறப்படும் விடயத்தை மறுதலிக்க முடியாது என அரச இரசாயன பகுப்பாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எரிபொருள் விசிறப்பட்டோ அல்லது மின்சாரக் கசிவினாலோ தீ பரவவில்லை என்பது உறுதியாகியுள்ளது என்று அரச இரசாயன பகுப்பாய்வு அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயர் நீதிமன்றத்தில் பணியாற்றும் சிற்றூழியர்கள் சிலர் இரகசியமான முறையில் மறைந்திருந்து சிகரெட் புகைத்துள்ளமை இதுவரையான விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த செயற்பாட்டில் ஈடுபட்டவர்கள் யார் என்பது தொடர்பில் தற்போது விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (ம-இ)

# சதொச ஊழியர்கள் 13 பேருக்கு தொற்று!

வத்தளை, டிசெ.30
வத்தளை வெலிசறவில் உள்ள சதொச களஞ்சியசாலையில் பணியாற்றிய ஊழியர்கள் 13 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இங்கு கூலி வேலை செய்த ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்த நிலையில், அவருடன் தொடர்பிலிருந்தவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் 13 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ந-இ)

# கோத்தாபயவுக்கு ஜின்பிங் வாழ்த்து

கொழும்பு, டிசெ.30
சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் இலங்கை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோருக்கு வாழ்த்து மடல்கள் மூலம் புத்தாண்டு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

கடந்த 25ஆம் திகதி சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் கையெழுத்திட்ட புத்தாண்டு வாழ்த்து அட்டைகள் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளன என கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது. (ச)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து ...

மாணவர் ஒருவர் குறிப்பிட்ட ஒரு துறைதான் தனக்குப் பொருத்தமானது என்று தெரிவு செய்து அதைக் கற்றுத் தேறுகின்றார். தன் தேர்ச்சியை வெளிப்படுத்தி பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகின்றார். அங்கு தனக்குப் பிடித்தமான துறை தொடர்பான பட்டப்படிப்பை மேற்கொள்கிறார். பல்கலைக்கழகமும் நான்கு வருடங்கள் குறிப்பிட்ட அந்தத்துறையில் மாத்திரம், சகல பரிமாணங்களையும் போதித்து, அந்தத் துறையில் நிபுணத்துவம் பெற்ற ஒரு பட்டதாரியாக அவரை உருவாக்கும். அவருக்கு எந்தத் துறையில் வேலைவாய்ப்பு வழங்கப்பட வேண்டும்?. எந்தத் துறையில் அவன் கற்றுத் தேர்ந்தானோ அந்தத் துறையில்தானே. ஆனால் இலங்கையில் நடப்பது என்னமோ முற்றிலும் முரண்நிலைதான்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் கலைப் பிரிவில் கற்றுத் தேர்ந்து பல்கலைக்கழகத்தில் அது தொடர்பில் பட்டப்படிப்பை மேற்கொண்டு பட்டம் பெற்றவனை வங்கியில் காசாளராக அமர்த்தியுள்ளது இந்த அரசு. அதேபோல் வணிகமாணி பட்டம்பெற்ற ஒருவன் பாடசாலை ஒன்றின் நூலகராக பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளான். இந்த முரண்நிலை நியமனங்களால் என்ன நன்மை உண்டு?. நியமனம் வழங்கப்படுகின்ற துறை தொடர்பான அடிப்படை அறிவு மற்றும் கல்வியறிவு அற்ற ஒருவரால் எவ்வாறு தன் பணிகளை செவ்வனே ஆற்றமுடியும்?

இலங்கையில் அரச திணைக்களங்கள் வினைத்திறனாக இல்லை என்ற பொதுவான குற்றச்சாட்டு பரவலாக உள்ளமை அனைவரும் அறிந்ததுதான். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சகூட அண்மையில் இது தொடர்பில் வெளிப்படையாகவே தனது அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தார். இது உண்மை. ஆனால் இதற்குரிய காரணம் இவ்வாறான அடிப்படைப் பிறழ்வுகள்தான். இதைச் சரிசெய்யாமல் பணியாளர்களைக் குறைகூறிக் கொண்டிருப்பதால் எந்த நன்மையும் இங்கு நிகழ்ந்துவிடப் போவதில்லை. தேர்தல் காலங்களில் வெறும் வாக்கு வங்கிகளை இலக்குவைத்து வழங்கப்படும் இந்த நியமனங்கள் எவ்வித ஆரோக்கியமான தாக்கங்களையும் ஏற்படுத்தப்போவதில்லை. நீங்கள் நியமனங்களை வழங்குவது 'வேலையில்லாத் திண்டாட்டம்' என்ற எதிர்ப்பலையைக் கட்டுப்படுத்துவதற்காக, வாக்கு வங்கிகளைத் தக்கவைப்பதற்காக. இந்தக் குறுகிய மனநிலையே இன்று வினைத்திறன் அற்றதான நிலையில் நாட்டைக் கொண்டுவந்து விட்டுள்ளது.

இந்த முரண்நிலையிலான செயற்பாடுகள்தான், 12 ஆயிரம் பட்டதாரிப் பயிலுநர்களுக்கான நிரந்தர நியமனங்களை ஜனவரியில் இருந்து வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், தாம் எந்தத் துறையில் கல்வி கற்றோமோ அதே துறையில்தான் தமது நியமனங்களும் வழங்கப்பட வேண்டும் என்று பட்டதாரிப் பயிலுநர்கள் தற்போது வெளிப்படையாகக் குரல் எழுப்பவும் காரணமாகியுள்ளது.

அரச இயந்திரத்துக்குள் இனி வழங்கப்படவுள்ள நியமனங்களாவது அர்த்தப்பாடான நியமனங்களாக அமையட்டும். கிரிக்கெட் வீரர்சச்சினை இசைத்துறைக்குள் வலிந்து அனுப்பினால் அவரால் இசையமைக்க முடியுமா?. ஏ.ஆர்.ரகுமானை கிரிக்கெட் துறைக்குள் திணித்தால் அவரால் சதங்களைக் குவிக்க முடியுமா?. இதைத்தான் வேலைவாய்ப்பு என்ற பெயரில் இலங்கை அரசு செய்துகொண்டிருக்கின்றது. துறையில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு அந்தந்தத் துறையில் நியமனங்களை வழங்குவதே ஆக்கபூர்வமானதாக இருக்கும். அதுவே புத்தாக்க சிந்தனைகள் திணைக்களங்களில் தோற்றம் பெற வழிசமைக்கும். அதைவிடுத்து சம்பிரதாயபூர்வமான நியமனங்களால் பயன் ஏதுமில்லை.

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து அதனை அவன்கண் விடல்"

# ஒரு இனம் சார்ந்த முடிவுகளை அரசு தனித்து எடுக்கமுடியாது

### புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சி தெரிவிப்பு

மட்டக்களப்பு, டிசெ.30

**கொரோனா இறப்பு விடயம் தொடர்பில் அரசு ஒரு முடிவை எடுப்பதாக இருந்தால் தனித்து ஒரு இனத்தைச் சார்ந்து எடுக்காமல் இந்த நாட்டில் வாழும் ஏனைய இன மக்களின் கருத்துக்களையும் கருத்திற்கொண்டே எடுக்க வேண்டும் என புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் க.இன்பராசா தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

ஒரு மதம் சார்ந்து சிந்தித்து இஸ்லாமிய சகோதரர்கள் உயிரிழக்கும் தம்மவரின் உடல்களை அடக்கம் செய்யத் தரும்படி கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றனர். இதற்கு தற்போது அரசு இணக்கம் தெரிவித்தது போன்றும், நீர் மட்டம் ஆழமாக உள்ள பகுதிகளை இதற்காகத் தெரிவு செய்து தருமாறும் கோரப்பட்டுள்ளது எனவும் செய்திகள் வந்துள்ளன. அந்த அடிப்படையில் கிழக்கு மாகாணத்தில் இறக்காமம், மற்றும் வடக்கு மாகாணத்தில் மன்னார் மறிச்சுக்கட்டி ஆகிய பிரதேசங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன என செய்திகள் வந்துள்ளன. இது தொடர்பில் எமது வேண்டுகோள் என்னவென்றால் இந்த நாட்டில் நீதி, நியாயம் சரிசமமாக இருக்க வேண்டும். இதில் ஒரு சாராருக்கு சார்பானதாக இருக்கக்கூடாது. இதனை இன, மத ரீதியில் அணுகவேண்டாம். இன்றைய நிலையில் குறப்பிட்ட வீதமான இந்து மக்களும் உயிரிழந்த தம்மவரின் உடலங்களை அடக்கம் செய்வதையே வழக்கமாகக் கொண்டுள்ளனர். அதே போன்று கிறிஸ்தவ மக்களும் அவர்களின் உடலங்களை அடக்கம் செய்தே வருகின்றனர். அவ்வாறே பெரும்பான்மை பௌத்த மக்களும் முற்று முழுதாக தகனச் செயற்பாடுகளை மேற்கொள்வதில்லை. அரசு ஒரு முடிவை எடுப்பதாக இருந்தால் தனித்து ஒரு இனத்தைச் சார்ந்து எடுக்காமல் இந்த நாட்டில் வாழும் ஏனைய இன மக்களின் கருத்துக்களையும் கருத்திற்கொண்டே தீர்மானம் எடுக்க வேண்டும் என்றுள்ளது. (ப-6,150)

## தொற்றாளரை மறைத்தால் கடும் சட்ட நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 30



கொரோனாத் தொற்றால் தனிமைப்படுத்தப்பட்டுள்ள அல்லது சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் தப்பியோட மற்றும் மறைந்திருப்பதற்கு உதவி புரிந்தால் அவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றாளியாக இனங்காணப்பட்டு, தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் தப்பியோடிய சப்புகஸ்கந்த பகுதியைச் சேர்ந்த நபர் குறித்து ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரி வித்தபோது அவர் இவ்வாறு தெரி

## தொல்பொருள் திணைக்களத்துக்கு புதிய பணிப்பாளர்

கொழும்பு,டிசெ.30

மூத்த பேராசிரியர் அநுர மனதுங்க, தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் செனரத் திசாநாயக்க, நாளைமறுதினம் முதலாம் திகதியுடன் ஓய்வுபெறவுள்ளதால், அந்த பதவிக்கு பேராசிரியர் அநுர மனதுங்க நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ-இ)

### திடீரென இறப்போருக்கும் பி.சி.ஆர்;

## கிரியைகளை முன்னெடுக்க உறவினர்கள் பெரும் சிரமம்

சாவகச்சேரி, டிசெ.30

திடீர் மரணமடைவோருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பரிசோதனை அறிக்கை வரும் வரை சடலத்தைக் கொண்டு செல்லமுடியாத நிலை உறவினர்களுக்கு ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று ஏற்பட்ட காலம் தொடக்கம் நாட்டில் திடீர் மரணங்கள் சம்பவிக்கும் போதும், வீட்டில் மரணம் சம்பவிக்கும் போதும் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பெறப்படும் மாதிரிகள் ஆய்வுக்காக அனுப்பப்பட்டு பெறுபேறு கிடைக்கும் வரை சடலம் உறவினர்களிடம் வழங்கப்படமாட்டாது. மரணம் தொடர்பாக திடீர் மரண விசாரணைகள் நடத்தப்பட்டாலும் பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கை கிடைக்கும் வரை உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தப்படுவதில்லை. பி.சி.ஆர். பரிசோதனை எப்போது கிடைக்கிறதோ அதன் பின்னரே உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தப்பட்டு சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்படுகிறது. அதுவரை மருத்துவமனை சவச்சாலையில் சடலம் வைக்கப்படுகிறது. இதனால் மரணமடைந்தவரின் சடலத்தை உரிய காலத்தில் கிரியைகள் மேற்கொண்டு அடக்கம் செய்ய முடியாமல் உறவினர்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ப-9)

# அரசாங்கத்தின் செயற்பாடுகளால் ஜீ.எஸ்.பி. சலுகைக்கும் ஆபத்து

## கூறுகிறார் ஐ.ம.சக்தி எம்.பி நளின் பண்டார

கொழும்பு, டிசெ.30

**2021 ஆம் ஆண்டிலாவது நாட்டை மேம்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.**



எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில், 2021 சுபீட்சமான ஆண்டாக அமையும் என்று ஜனாதிபதி கூறுகின்றார். ஆனால் மக்களுக்கு 3 வேளை உண்பதற்குக் கூட உணவு கிடைக்குமா என்பது சந்தேகமாகும். கொவிட் தடுப்பூசி கண்டுபிடிக்கப்படாவிட்டாலும் உலக நாடுகள் அவற்றை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளன. ஆனால் இலங்கையில் கொவிட் பாணியை வைத்து மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றனர். வெளிநாட்டுக் கொள்கைகளிலும் நாடு முறையற்ற விதத்தில் செல்லுமாயின் எதிர்காலத்தில் ஜீ.எஸ்.பி. வரிச்சலுகை அற்றுப் போகக்கூடும் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. வியத்மக அமைப்பிலுள்ள பலருக்கும் அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலைமையின் கீழ் நாட்டை சுபீட்சமுடையதாக்க முடியுமா? முதலீட்டாளர்கள் எவ்வாறு நாட்டில் நம்பிக்கை வைத்து முதலீடுகளை மேற்கொள்வார்கள்? இவ்வாறான நெருக்கடிகளுக்கு மத்தியில் பலருக்கும் தொழில் வாய்ப்புக்களும் அற்றுப் போயுள்ளன.

பொருளாதாரம் இவ்வாறு வீழ்ச்சியடைந்து செல்கின்ற நிலையில் சேனா படைப்புழு தாக்கமும் விவசாயிகளை நெருக்கடிக்கு உள்ளாக்குகின்றது. அவற்றை கருத்தில்கொண்டு நாட்டை முன்னேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (ந-இ)

## சஞ்சிகை அறிமுகம்




தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான ஞானச்சுடர் சஞ்சிகையின் 273 ஆவது இதழ் வெளிவந்துள்ளது.

சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் சைவத்தையும் தமிழையும் சென்றடையச் செய்யும் முயற்சியாகவும், நோக்கமாகவும் இவ்வெளியீடு அமைந்துள்ளது.

இம்முறை ஞானச்சுடரில் திருக்குறள், நற்சிந்தனைகள், சிவம், திருச்சதகம், அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாள், திருவிளையாடற் புராண வசனம், உலகம் என்பது உயர்ந்தோர் வழித்துணை, இசையும் வசையும், இலட்சுமி கடாட்சம், வானதி, நித்திய அன்னப்பணி, நாயன்மார் பாடல்களில் காணப்படும் சைவ வாழ்வியல் சிந்தனைகள், சைவத் தமிழ் போற்றும் சான்றோர் வரிசையில் காசிவாசி செந்திநாதையர், இயங்கும் இயக்கமே இறைவன், அம்மா என்பது சும்மாவா?, சைவப் பெருமக்கள் கலியுகவரதன் முருகனை வேண்டி அனுஷ்டிக்கும் தலையாய விரதம் கந்தசஷ்டி, கதிர்காம யாத்திரை, கவிதை போன்ற பல விடயங்கள் இடம்பெற்றுள்ளன. வழக்கம்போல சஞ்சிகையுடன் செல்வச் சந்நிதி முருகனின் விபூதிப் பிரசாதமும் இணைக்கப்பட்டுள்ளமை தனிச்சிறப்பு.

ஒவ்வொரு மனிதனின் பக்குவத்துக்கும் ஏற்றவாறு அவர்களது உள்ளத்தில் ஒளியேற்ற ஞானச்சுடர் வழிசமைத்துள்ளது.

**தொடர்புகளுக்கு :** சந்நிதியான் ஆச்சிரமம், சைவ கலை பண்பாட்டுப் பேரவை, தொண்டைமானாறு, யாழ்ப்பாணம்.
021 321 9599, 021 226 3406.

# பெரமுன தோல்வி!

கொழும்பு, டிசெ.30

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வசமுள்ள ருவன்வெல்ல பிரதேச சபை வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

இவ் வரவு செலவுத் திட்டத்துக்கு எதிராக 17 வாக்குகளும் ஆதரவாக 11 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் 9 உறுப்பினர்களும், சமசமாஜக்கட்சியின் 3 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் 2 உறுப்பினர்களும், ஜே.வி.பி மற்றும் சுயாதீன குழு உறுப்பினர்களும் எதிராக வாக்களித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பெண் உறுப்பினர் ஒருவரும் சுதந்திர கட்சியின் ஓர் உறுப்பினரும் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை. எட்டியாந்தோட்டை பிரதேச சபை உப தலைவர் வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராகவே வாக்களித்துள்ளார் எனக் கூறப்படு கிறது. (ந-இ)

# ஆரம்பப் பிரிவு மாணவர்களை 2 பிரிவுகளாக அழைக்கத் தீர்மானம்

கொழும்பு, டிசெ.30

எதிர்வரும் ஜனவரி மாதம் 11 ஆம் திகதி ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் ஆரம்பமாகவுள்ள நிலையில், மாணவர்களை இரண்டு பிரிவுகளாக பாடசாலைகளுக்கு அழைப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. நேற்று இடம்பெற்ற செய்தியாளர்களுடனான சந்திப்பில் கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, மாணவர்கள் மத்தியில் தனிப்பட்ட இடைவெளியை முன்னெடுப்பதற்காக இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

மாணவர்களின் நலன் கருதியே முறையான திட்டமிடலுக்கு அமைவாகவே, ஜனவரி மாதம் 11 ஆம் திகதி பாடசாலைகளை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டது. இது உடனடியாக எடுக்கப்பட்ட தீர்மானம் அல்ல.

விசேட வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகளும் இதற்காகப் பெற்றுக் கொள்ளப்பட்டன. பாடசாலைகளை திறக்குமாறு பெற்றோர் நாளாந்தம் கோரிக்கை விடுத்து வருகின்ற நிலையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ந-இ)

# 5 ஜனாஸாக்கள் தகனம்



கொழும்பு, டிசெ.30

கொரோனாத் தொற்றால் உயிரிழந்த 5 முஸ்லிம் நபர்களின் ஜனாஸாக்கள் கொழும்பு பொறளை பொது மயானத்தில் நேற்றுமுன்தினம் மாலை தகனம் செய்யப்பட்டுள்ளன. குறித்த ஜனாஸாக்கள் அவர்களின் உறவினர்களால் பெற்றுக்கொள்ள மறுக்கப்பட்டிருந்தன. இதனால் அவை கொழும்பு பல்கலைக் கழகத்துக்கு சொந்தமான குளிரூட்டப் பட்ட விசேட கொள்கலனில் வைக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் அந்த 5 உடல்களும் தகனம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)

# நீதியமைச்சுக்கு 55 மடிக்கணினிகள்

கொழும்பு, டிசெ.30

கொரோனா விதிமுறைகளைப் பேணி நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், வழக்குகளை விசாரிப்பதற்கும், ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் 55 மடிக்கணினிகள் நீதி அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளன. நீதி அமைச்சர் அலி சப்ரியின் கோரிக்கைக்கு ஏற்ப இந்த மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

"சமூக இடைவெளிகளைப் பேணி வழக்குகளை விசாரிப்பதற்கும், நீதிமன்றக் கட்டமைப்பை டிஜிட்டல் மயப்படுத்துவதற்குமான நீண்டகால நடவடிக்கையின் மற்றொரு நடவடிக்கையே இது" என நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார். (ச-இ)

# தரச்சான்றிதழ் நிறுவனத்தின் தலைவராக நுஷாட் பெரேரா

கொழும்பு, டிசெ.30

இலங்கை தரச்சான்றிதழ் நிறுவனத்தின் புதிய தலைவராக நுஷாட் பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இதற்கு முன்னர் சதொச நிறுவனத்தின் தலைவராக செயற்பட்டுள்ளார்.

அத்துடன், சதொச நிறுவனத்தின் புதிய தலைவராக வெனுர குணவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, கடந்த அரசாங்கத்தில் சதொச நிறுவனத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடிகள் தொடர்பில் ஆராய தடயவியல் கணக்காய்வு மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். (ந-இ)

# பட்டத்தின் தன்மைக்கு ஏற்ப நியமனங்களை வழங்குங்கள்

## பயிலுநர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.30



**பட்டத்தின் தன்மைக்கு ஏற்ப பட்டதாரிகளுக்கு பதவிகள் வழங்கப்படவில்லை, வெறும் அபிவிருத்தி அலுவலர் என்ற பதவியால் எவ்வித பயனுமில்லை என்று பட்டதாரி பயிலுநர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;
12 ஆயிரம் பட்டதாரிகள் நியமனத் திட்டத்தின் கீழ் பட்டதாரிப் பயிலுநர்களாக நியமனம் பெற்றவர்களுக்கான நிரந்தர நியமனம் வரும் ஜனவரியில் இருந்து வழங்க இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் எஸ். ஆலோக பண்டா துரித நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதன் பிரகாரம் பட்டதாரி பயிலுநர்கள் தமது விவரங்களை ஒன்லைன் மூலம் பூர்த்தி செய்வதுடன் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களுக்கு அனுப்பிவைக்கும் பட்சத்தில் பட்டதாரி அபிவிருத்தி அலுவலர் சேவையில் எம்.என் 4 சம்பள அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். எனினும் பட்டதாரி அபிவிருத்தி அலுவலர் சேவை என்பது வெறும் அபிவிருத்தி அலுவலர் அல்ல நான்கு வருடப் பட்டப்படிப்பை பல்கலைக்கழகத்தில் முடித்து வெளியேறிய எமக்கு ஒரு வருட பயிற்சியின் பின்னர் பட்டத்தின் தன்மைக்கு ஏற்ப அரச சேவைகளில் பதவிகள் வழங்கப்படாது வெறும் அபிவிருத்தி அலுவலர் என்ற பதவியால் முடக்கப்படுகிறோம் என்றனர். (ஜ-50)



## சிக்கியது உழவு இயந்திரம்

கிளிநொச்சி, டிசெ.30
மணல் அகழ்வதற்கு கொண்டு வரப்பட்டது என்ற குற்றச்சாட்டில் உழவு இயந்திரம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.
கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கதவைத் திறப்பதற்குச் சென்ற அதிகாரிகள், கழிவு நீர் செல்லும் வாய்க்கால்களை மேற்பார்வை செய்யும்போதே அந்த உழவு இயந்திரத்தைக் கண்டுபிடித்தனர்.
"சட்டவிரோதமான மணல் அகழ்வு மூலம் இரணைமடுக் குளத்தின் கழிவு நீர் செல்லும் பகுதிகள் கடுமையாக சேதமாக்கப்பட்டுள்ளன. இதனால் எதிர்காலத்தில் பெரும் வெள்ள இடர் ஏற்படக்கூடிய சாத்தியமும் உள்ளது. எனவே மணல் அகழ்வு நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் கிளிநொச்சி மாவட்டத்தின் பாதுகாப்பைக் கருதி இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாம் என்று இடர் முகாமைத்துவப் பிரிவினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ப-222)

## 210 குடும்பங்களுக்கு உணவுப் பொருள்கள்

### தென்மராட்சியில் இன்று வழங்க ஏற்பாடு

சாவகச்சேரி, டிசெ.30
தென்மராட்சி பிரதேசத்தில் புரேவிப் புயல் மற்றும் பெருமழையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் மேலும் 210 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் இன்றுமுதல் அந்தந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் கடைகள் மூலம் வழங்கப்படவுள்ளன.
யாழ்.மாவட்டச் செயலகத்தால் கட்டம், கட்டமாக அனுப்பப்படும் நிதியின் அடிப்படையில் முதல்கட்டமாக மிக மோசமாக பாதிக்கப்பட்ட 615 குடும்பங்களுக்கும், கடந்த வாரம் மேலும் 600 குடும்பங்களுக்கும் உலர் உணவுப் பொருள்கள் சங்கக் கிளைக் கடைகள் மூலம் விநியோகிக்கப்பட்டன. நேற்றைய தினம் கிடைத்த நிதி மூலம் மேலும் 210 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.
பிரதேசத்தில் புரேவிப் புயல் மற்றும் பெருமழையால் 2 ஆயிரத்து 962 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 992 பேர் பாதிக்கப்பட்டனர். வெள்ளத்தால் 7 வீடுகள் மற்றும் சுயமுயற்சியாளரின் வர்த்தக நிலையம் ஆகியன முழுமையாகவும், 790 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்தன. பாதிக்கப்பட்ட குடும்பங்களில் நிவாரண உதவிகள் பெறத் தகைமையுடைய குடும்பங்களுக்கு மட்டும் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (ப-9)



## நெடுந்தீவில் 240 குடும்பங்களுக்கு சூழகம் அமைப்பால் உதவிகள்

நெடுந்தீவு, டிசெ.30
நெடுந்தீவு பிரதேசத்தில் புயலால் பாதிக்கப்பட்ட 240 குடும்பங்களுக்கு சுகாதார ரீதியான பொருள்கள் சூழகம் அமைப்பால் அண்மையில் வழங்கப்பட்டன.
சூழலியல் மேம்பாட்டு அமையத்தின் செயலாளர் கருணாகரன் நாவலனின் ஏற்பாட்டில் இந்த உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன.
நெடுந்தீவு முதலாம் வட்டாரத்தில் அமைந்துள்ள சனசமூக நிலையத்தில் 60 குடும்பங்களுக்கும், நெடுந்தீவு மகா வித்தியாலய சுற்றாடலில் அமைந்துள்ள 100 குடும்பங்களுக்கும், நெடுந்தீவு கிழக்கு சுப்பிரமணியம் வித்தியாலயத்தை அண்டிய பகுதியில் உள்ள 80 குடும்பங்களுக்குமே இவ் உதவிகள் வழங்கப்பட்டன.
கனடாவில் வசிக்கின்ற நெடுந்தீவின் மைந்தர்களான கண்ணன் , திருமதி ஆனந்தி , ஜனார்த்தனன் மற்றும் புங்குடுதீவு மூன்றாம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி பத்மாஜனதேவி தர்மராஜா ஆகியோரின் நிதியுதவி ஊடாக இச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது. (ஐ)

## மரமஞ்சளுடன் ஒருவர் கைது

கொழும்பு,டிசெ.30
வீடொன்றில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த 35 கிலோ கிராம் மரமஞ்சள், கஞ்சாச் செடி மற்றும் துப்பாக்கி ஆகியவற்றுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
கொக்கல விமானப்படை முகாமின் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலை அடுத்து இமதுவ, கணங்கே பிரதேசத்தில் வைத்து சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
கைப்பற்றப்பட்ட பெருந்தொகை மரமஞ்சள் கணங்கேகொடகல மலையிலிருந்து வெட்டப்பட்டவை என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ஐ-இ)

## விபத்துக்களில் நால்வர் காயம்

சாவகச்சேரி, டிசெ. 30
மீசாலை வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் ஆகிய இடங்களில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்துக்களில் சிக்கி நான்கு பேர் காயமடைந்தனர்.
மீசாலை வடக்கு பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மீசாலை வடக்கைச் சேர்ந்த 45 வயதுடைய ஒருவரும், கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த 25 வயதுடைய ஒருவரும் காயமடைந்தனர்.
இதேவேளை மீசாலை தெற்கில் இடம்பெற்ற விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 37 வயதுடைய ஒருவரும் அவரது மனைவியான 34 வயதுடையவரும் காயமடைந்தனர்.
காயமடைந்த நால்வரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ரி5-9)

## கொவிட் பாதுகாப்பு தொடர்பில் கலந்துரையாடல்

வவுனியா, டிசெ.30
கொவிட்19 தாக்கம் மற்றும் அது தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பான விசேட கலந்துரையாடல் வவுனியா மாவட்டச்செயலகத்தில் நேற்று நடைபெற்றது.
வவுனியா மாவட்டச் செயலர் சமன் பந்துலசேன தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில், கொவிட்- 19 தாக்கம் தொடர்பில் வவுனியாவின் தற்போதைய நிலை, மற்றும் கொவிட் தாக்கத்தை கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டன.
இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான், மேலதிக மாவட்டச் செயலர் தி.திரேஸ்குமார், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மகேந்திரன், சுகாதார மருத்துவ அதிகாரிகள், பொலிஸார், இராணுவ அதிகாரிகள், திணைக்கள தலைவர்கள் என பலர் கலந்துகொண்டனர். (ஜ1-10,18)



## பைசர் நிறுவனத்துடன் இலங்கை அரசு பேச்சு

கொழும்பு, டிசெ.30
கொரோனாவுக்கு எதிரான மருந்தைத் தயாரித்துள்ள பைசர் நிறுவனத்துடன் இலங்கை அரசு பேச்சுக்களை ஆரம்பித்துள்ளது. தனியார் நிறுவனமொன்று இந்தப் பேச்சுக்களுக்கு உதவியுள்ளதுடன் மருந்து விநியோகம் தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு முன்வந்துள்ளதைத் தொடர்ந்தே இந்தப் பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளன.
பைசர் மற்றும் அஸ்ராஜெனேகாவுக்கான இலங்கை முகவரான ஹேமாஸ் பார்மசூட்டிக்கல் நிறுவனம் பைசர் நிறுவனத்துக்கும் சுகாதார அமைச்சுக்கும் இடையேயான பேச்சுக்களுக்கு உதவியுள்ளது என கொழும்பு பத்திரிகை ஒன்று குறிப்பிட்டுள்ளது. (ப)



முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆறுமுகத்தான் குளம் பகுதியைச் சேர்ந்த 110 குடும்பங்களுக்கு, ஜீவ ஊற்று அன்பின் கரம் ஊடாக, புலம்பெயர் மாணவர்களின் நிதிப்பங்களிப்பில் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (சு-222)



மன்னாரில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் ஏற்பாட்டில், வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள 100 குடும்பங்களுக்கு உலர் உணவு நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டன. (சு-56)



தாய்த்தமிழ் பேரவையின் ஒழுங்கமைப்பில், முருகுப்பிள்ளை தம்பையாவின் நினைவை முன்னிட்டு அவரது குடும்பத்தினரின் நிதிப்பங்களிப்பில், முல்லைத்தீவு மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 20 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (சு-222)



லண்டனில் வசித்துவரும் வர்ணந்தி வர்ணச்சந்திரனின் 19 ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு நெடுங்கேணி மாமடுச்சந்தி வெள்ளைப்பிள்ளையார் ஆலய கற்பகா அறநெறிப் பாடசாலையின் நுழைவாயிலுக்கான கதவு அமைக்கப்பட்டது. மாணவர்களுக்கு மதிய நேர உணவும் வழங்கப்பட்டது. (சு-222)



ஒட்டங்கேணி சனசமூக நிலையத்தின் வேண்டுகோளுக்கு இணங்க, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 25 குடும்பங்களுக்கு, கயிற்ஸ் தீவகம் லயன்ஸ் கழகத்தால், உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (சு-159)



தாயக விருட்சம் சுவிஸ் அமைப்பின் ஒருங்கமைப்பில், தர்மலிங்கம் சசிதரனின் நினைவை முன்னிட்டு, அவர்களின் உடன்பிறப்புகளின் நிதிப்பங்களிப்பில், புதியகுடியிருப்பு கிராமத்தில் வசிக்கும் 16 வறுமைப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் மற்றும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. (சு-222)



முருகானந்தம் மலர்விழி ஆகியோரின் நினைவு நாளை முன்னிட்டு, முல்லைத்தீவு கணுக்கேனியைச் சேர்ந்த, புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த மாணவிக்கு, துவிச்சக்கர வண்டி வழங்கப்பட்டது. (சு-222)



ஜீவ ஊற்று அன்பின் கரம் ஊடாக முழங்காவில் மற்றும் அடம்பன் பகுதியைச் சேர்ந்த 4 பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. இதற்கான நிதி அனுசரனையை நெதர்லாந்து மிசன் மெயில் நிறுவனத்தினர் வழங்கினர். (சு-222)



ஜீவ ஊற்று அன்பின் கரம் ஊடாக, கொடிகாமம், தவசிக்குளம் நுணாவில், சாவகச்சேரி, மீசாலை பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன. நிதி அனுசரனையை ஆஸ்திரேலியா சர்வதேச இமேஜின் கெம்பாசிஷன் நிறுவனத்தினர் வழங்கினர். (சு-222)



NEEM நிறுவனம், லண்டன் என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் நிதியுதவியுடன், தலைமன்னார், எழுத்தூர் விடத்தல்தீவு ஆகிய கிராமங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு, முன்னுரிமை அடிப்படையில் ஒரு தொகை நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டன. (சு-110)



தாயகவிருட்சம் சுவிஸ் அறக்கட்டளையின் ஒழுங்கமைப்பில் சுவிஸ் நாட்டில் வசித்து வரும் சரன்ஜன், மாதுரி ஆகியோரின் திருமணத்தை முன்னிட்டு, விசுவமடு தொட்டியடி, பாரதிபுரம் நெத்தலியாறு கிராமத்தில் தெரிவுசெய்யப்பட்ட 40 வயோதிபர்களுக்கான அரிசி மற்றும் தென்னங் கன்றுகள் வழங்கப்பட்டன. (சு-222)



சுசிலன் பவுன்டேசன் நிறுவனம் ஊடாக, புயலால் பாதிக்கப்பட்ட காக்கைதீவைச் சேர்ந்த 54 குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. இதற்கான நிதி உதவியை சிவசுப்பிரமணியம் மற்றும் அவர்களது பிள்ளைகள் வழங்கினர். (சு-222)

# மாகாண சபைகளின் நிர்வாகத்தை ஆளுநர் முன்னெடுக்கவே முடியாது

## பெரமுனவின் பொதுச் செயலர் சுட்டிக்காட்டு



கொழும்பு, டிசெ. 30

மாகாண சபைகளின் நிர்வாகம் ஆளுநர்களாலும், அரச அதிகாரிகளாலும் முன்னெடுக்கப்படுவது ஜனநாயகக் கோட்பாட்டுக்கு முரணானது என பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

மாகாண சபைத் தேர்தல் குறித்து மாறுபட்ட பல கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன. மாகாண சபைத் தேர்தல் உரிய காலத்தில் இடம்பெற்றிருந்தால் மாகாண சபைக்கு எதிரான கருத்துக்கள் தற்போது தோற்றம் பெற்றிருக்காது. மாகாண சபைத் தேர்தல் குறித்து அரசு விரைவில் உறுதியான தீர்மானத்தை எடுக்கும். மாகாண சபை நிர்வாகம் ஆளுநர் உட்பட அரச அதிகாரிகளால் முன்னெடுக்கப்படுவது ஜனநாயகக் கொள்கைக்கு முரணானது என்பதில் பொதுஜன பெரமுன கட்சி உறுதியாக உள்ளது.

தேசிய வளங்களை பிற நாட்டவர்களுக்கு விற்பது அரசின் கொள்கையல்ல. தேசிய வளங்களைக் கொண்டு வெளிநாட்டு முதலீடுகள் ஊக்குவிக்கப்படுமே தவிர தேசிய வளங்கள் ஒருபோதும் விற்கப்படமாட்டாது.

கடந்த அரசு செய்த தவறை தற்போதைய அரசு தொடர்ந்தால் மக்கள் ஜனநாயக ரீதியில் பாடம் புகட்டுவார்கள். ஆகவே மக்கள் வழங்கிய ஆணைக்கு எதிராக அரசு ஒருபோதும் செயற்படமாட்டாது - என்றார். (ப)

## 600க்கும் மேற்பட்ட கர்ப்பிணிகள் கொரோனா வைரஸால் பாதிப்பு



கொழும்பு, டிசெ. 30

இலங்கையில் 600க்கும் மேற்பட்ட கர்ப்பிணி பெண்கள் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என மகப்பேற்றியல் மற்றும் மகளிர் மருத்துவ நிபுணர் வைத்தியர் மதுரம்மான தேவோலகே தெரிவித்தார்.

இந்நிலையில், "கர்ப்பிணிப் பெண்கள், குறித்த வைரஸ் தொடர்பில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

மாதாந்த பரிசோதனைகளுக்கு செல்வது தொடர்பில் கர்ப்பிணித் தாய்மார்கள் மத்தியில் அச்சம் காணப்படுகின்றது. எனினும், அவர்கள் கட்டாயம் பரிசோதனைகளுக்கு செல்ல வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ரி5)

## கொழும்பில் இன்று கூடுகிறது சு.கவின் மத்திய செயற்குழு

கொழும்பு, டிசெ.30

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் கட்சித் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

கொழும்பு டார்லி வீதியில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் மாலை 7 மணிக்கு மத்திய செயற்குழு கூடவுள்ளது. இதன்போது மாகாணசபைத் தேர்தல் உள்ளிட்ட நடைமுறை அரசியல் விவகாரங்கள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது சில விவகாரங்களில் அரசுடன் சுதந்திரக் கட்சிக்கு முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன எனக் கூறப்படுகின்ற நிலையில், நீண்ட நாள்களின் பின்னர் கட்சியின் மத்திய குழு கூடவுள்ளமை முக்கியமான விடயமாகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் அதன் பின்னர் நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசின் வெற்றிக்காக பாடுபட்டது, எனினும் தற்போது தாம் புறக்கணிக்கப்படுகின்றமை அதிருப்தியளிக்கிறது என சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

மீண்டும் பொதுஜன பெரமுனவின் சில உறுப்பினர்களால் சு.க. மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தலைமைத்துவ மட்டத்தில் ஆராயப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (ப)



## மாஸ்க் அணியாவிடின் ரூபா 2 ஆயிரம் தண்டம்

### மன்.மாவட்டச் செயலர் எச்சரிக்கை

மன்னார், டிசெ.30

மன்னாரில் மாஸ்க் அணியாமல் சென்றால் 2ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்படும் என்று மன்னார் மாவட்டச் செயலாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற கொரோனா அவதானிப்புக் கூட்டத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

தற்போது மன்னாரில் பல பகுதிகளிலும் பொது மக்கள் மாஸ்க் அணியாமல் உலாவுவதைக் காணக்கூடியதாக உள்ளது. வீரியம் கூடிய கொரோனாத் தொற்று இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் கொரோனா தொடர்பான பயமோ அல்லது அவதானமோ இல்லாமல் மக்கள் இருப்பதை ஏற்க முடியாது. வருகின்ற புதுவருட கொண்டாட்டத்தால் வரும் நாள்களில் மிகுந்த ஆபத்து உடைய நாள்களாக இருக்கும்.எனவே ஏ.ரி.எம் இயந்திரப் பகுதிகள், சந்தைப் பகுதிகள், முருங்கன் வாகன சுத்திகரிப்பு நிலையங்கள் போன்ற பகுதிகளை சுகாதாரத் துறையினர் மற்றும் பொலிஸார் தீவிரமாகக் கண்காணிக்க வேண்டும். முகக்கவசம் அணியாமல் உலவும் அனைத்துத் தரப்பினருக்கும் பொலிஸார் நீதிமன்றம் ஊடாக தண்டத்தை அறவிட வேண்டும்- என்றார். (ப-213)

## இலங்கையரைச் சுரண்டுகிறது அரசுக்கு நெருக்கமான மாஃபியா

### ஐ.ம.ச குற்றச்சாட்டு



மன்னார், டிசெ.30

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக வெளிநாடுகளில் எவ்வித உதவிகளும் இன்றி சிக்கித் தவிக்கும் இலங்கையர்களை சுரண்டும் வகையில் மாஃபியா குழு செயற்பட்டு வருகிறது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள இந்தியர்களை அந்த நாட்டுக்கு அழைத்து வர இந்திய அரசு தலையிட்டு 800 ரியால்கள் பணத்தை விமான பயணச்சீட்டுக்காக வழங்குகிறது. எனினும் மத்திய கிழக்கில் சிக்கியுள்ள இலங்கையர்களிடம் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ரியால்கள் அறவிடப்படுகிறது. இந்தத் தொகையானது வழமையான காலத்தில் அற விடப்படும் தொகையை விட மிகவும் அதிகமான தொகையாகும்.

இவ்வாறு அதிகமான தொகையைச் செலவிட்டு இலங்கை திரும்பும் நபர்களுக்கு தனிமைப்படுத்துவதற்காக 5 நட்சத்திரக் ஹொட்டல்களை வழங்கி, அதன் ஊடாக மேலும் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட பணத்தைச் சுரண்டுகின்றனர். வெளிநாடுகளில் தொழில்களை இழந்து, இலங்கை திரும்பத் தாமதமாகிய நிலையில் நாடு திரும்பும் இலங்கையர்கள் மரத்தில் இருந்து கீழே தவறி விழுந்த நிலைமையில் இருக்கும் போது அரசுக்கு நெருக்கமான வர்த்தகர்களின் மாஃ பியா என்ற மாடு முட்டும் கதையாக மாறியுள்ளது - என்றார். (ப)

## இரத்தினங்கள் விற்பனை; இருவர் கைது

புதையல் இருந்து மீட்கப்பட்ட விலை மதிப்பற்ற இரத்தினங்கள் எனக் கூறி அவற்றை விற்பனை செய்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் பொலிஸ் விஷேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மதவாச்சி யகவெவ எனும் பகுதியில் நேற்று மாலை 6.30 மணியளவில் அவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டனர்.விலை மதிப்பற்ற நீல இரத்தினம், 75 வைரங்கள் எனக் கூறி அவற்றை விற்க முயன்றுள்ளனர். எனினும் ஆரம்ப விசாரணைகளில் மீட்கப்பட்ட இரத்தினங்களுக்கு உண்மையான மதிப்பு இல்லை எனத் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப)

# இனவாதத்தை தூண்டவே பிக்குகள் களமிறக்கம்

## முஜிபுர் ரஹ்மான் எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ.30

இனவாதத்தை தூண்டவே அரசாங்கம் திட்டமிட்டு பௌத்த பிக்குகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடச் செய்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தை அரசாங்கமே திட்டமிட்டு செய்வித்தது. இதில் கலந்து கொண்ட பௌத்த பிக்குகள் உள்ளிட்ட அனைவரும் அரசாங்கத்தை ஆதரிக்கும் நபர்கள். சுமார் 200 நாடுகள் கொரோனாத் தொற்றால் இறக்கும் நபர்களின் உடல்களை அடக்கம் செய்ய அனுமதி வழங்கியுள்ளன. ஆனால் எமது நாட்டில் அரசாங்கம் மக்களின் சமய நம்பிக்கைகளுக்கு இடமளிக்காது தன்னிச்சையாக செயற்பட்டு வருகிறது. இனவாதத்தைத் தூண்டி ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசாங்கம் தனது இயலாமையை மறைத்துக்கொள்ளவே தொடர்ந்தும் இனவாதத்தை தூண்டி வருகிறது - என்றார். (ஐ-இ)

## ஏ–9 வீதிப் போக்குவரத்தை ஒரு மணிநேரம் தடுத்த மரம்

வவுனியா, டிசெ. 30
வவுனியா ஏ9 பிரதான வீதி பேயாடிகூழாங்குளம் பகுதியில் மரம் முறிந்து வீழ்ந்ததில் குறித்த வீதியூடான போக்குவரத்து ஒருமணி நேரம் தடைப்பட்டது.
குறித்த பகுதியில் நின்றிருந்த பழமையான புளிய மரம் நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் வேரோடு சாய்ந்து மின்கம்பத்தையும் முறித்துக்கொண்ட ஏ9 வீதியின் குறுக்காக வீழ்ந்தது.
அந்தநேரம் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணிகளுடன் அரச பஸ் பயணித்துக் கொண்டிருந்தது. மரம் முறிந்துவீழ்வதை அவதானித்த அந்த பஸ் சாரதி வீதியோரம் பஸ்ஸை செலுத்தியதால் பஸ் ஆபத்திலிருந்து தப்பியது என்று தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் மரத்தை வெட்டி அகற்றினர். (த-110)

## எழுந்தமான பி.சி.ஆர்: எவருக்கும் தொற்றில்லை

சாவகச்சேரி, டிசெ.30
சாவகச்சேரி சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளால் கடந்த சனிக்கிழமை அதிகாலை கேரதீவு - சங்குப்பிட்டிப் பாலத்தில் நடத்தப்பட்ட எழுந்தமான பி.சி.ஆர். பரிசோதனையில் எவருக்கும் தொற்றில்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
கொழும்பு மற்றும் ஏனைய மாவட்டங்களிலிருந்து பயணிகளுடன் வருகைதந்த ஹைஏஸ் வாகனங்கள், மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்களை ஏற்றி வந்த வாகனங்களின் சாரதிகள் மற்றும் உதவியாளர்கள் 47 பேருக்கும், கைதடி மற்றும் நாவற்குழி பகுதிகளில் மருதனார்மடம் சந்தையுடன் தொடர்புடையவர்கள் என தனிமைப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டிருந்த 23 பேருக்கும் நடத்தப்பட்ட எழுந்தமான பி.சி.ஆர். பரிசோதனையிலேயே எவருக்கும் தொற்று ஏற்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. (ப-9)





## வவுனியாவில் தொற்று நீக்கம்

வவுனியா, டிசெ.30
கொரோனாத் தொற்றுப் பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் நாடளாவிய ரீதியில் தொற்றுநீக்கும் செயற்பாடுகள் பரவலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
அந்தவகையில் வவுனியா மாவட்டத்தில் இராணுவம், பொலிஸார், நகரசபை, மற்றும் சுகாதாரப் பிரிவினரின் பங்குபற்றுதலில் மாவட்டத்தின் சன நடமாட்டம் அதிகமுள்ள பொது இடங்களில் தொற்று நீக்கும் செயற்பாடு நேற்று முன்னெடுக்கப்பட்டது.
இதன்போது நகரசபையின் தீயணைப்பு வாகனங்கள் மூலம் பொது இடங்களில் நீர்பாய்ச்சி தூய்மையாக்கப்பட்டதுடன், தொற்றுநீக்கி மருந்துகளும் விசிறப்பட்டன. (ஜ-110)

# மன்னார்த் தீவு அழியாதிருக்க அனைவரும் கைகோருங்கள்

### மன். பிரஜைகள் குழு கோரிக்கை

**மன்னார், டிசெ. 30**
**மன்னார் தீவில் ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்ட ரி.எஸ்.எல் என்ற நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும், கனியவள மணல் அகழ்வு நடவடிக்கைகளைத் தடுத்து, தம்மோடு இணைந்து ஒத்துழைப்பை வழங்குமாறு மன்னார் மாவட்ட அரச உயர் அதிகாரிகளை மன்னார் பிரஜைகள்குழு கேட்டுக்கொண்டுள்ளது.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது;
ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்ட ரி.எஸ்.எல் என்ற இந்த நிறுவனமானது கடந்த ஐந்து வருடங்களாக மன்னார் மக்கள் எவருமே அறிந்திராத வகையில் அல்லது காணி உரிமையாளர்களின் அனுமதி பெறாது மிகவும் இரகசியமான முறையில் மன்னார் தீவின் அதிகமான பகுதிகளில் கனியவள மணல் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்று எம்மால் அறியப்பட்டுள்ளது.
ஆகவே எமது இந்த எதிர்ப்பு நடவடிக்கையின் நோக்கமானது ரி.எஸ்.எல் என்ற இந்த நிறுவனம் அதன் அடுத்த கட்ட நடவடிக்கையாக புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்திடமிருந்து மன்னார் தீவு மற்றும் அதனை அண்டிய கடற்கரை பிரதேசங்களில் மண் அகழ்வதற்கான உரிமத்தைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பம் செய்வதனை தடுத்து நிறுத்துவதாகும்.
இந்த மண் அகழ்வுத் திட்டம் முன்னெடுக்கப்படுமாயின் அதன் விளைவாக மாவட்ட சனத்தொகையின் மூன்றிலிரண்டு வீத மக்களைக் கொண்ட மன்னார் தீவு அழிவுக்குள்ளாகும் என நாம் நம்புகின்றோம். எனவே கனியவள மண் அகழ்வு நடவடிக்கைகளிலிருந்து மன்னார் தீவையும் அதனை அண்டியுள்ள கடற்கரைப் பிரதேசங்களையும் பாதுகாத்து எமது தற்கால மற்றும் எதிர்கால சந்ததியினரின் நல்வாழ்வுக்கு வழிவகுக்கும் வகையில் தங்களின் ஒத்துழைப்பை நாடி நிற்கின்றோம் - என்றனர். (ப-60)

## 36 ஆண்டுகளாக ஒதியமலைக்கு பேருந்து சேவைகள் இல்லை

### மக்கள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, டிசெ.30
முல்லைத்தீவு ஒதியமலைக் கிராமத்துக்கு பேருந்து சேவையை வழங்குமாறு அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் முல்லைத்தீவு, மாவட்டச் செயலரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
இது தொடர்பில் அந்த மக்கள் மேலும் தெரிவித்ததாவது;
1984ஆம் ஆண்டுக்கு முன்னர் முல்லைத்தீவு நகரத்தில் இருந்து தண்டுவான் வழியாக ஒதியமலைக் கிராமத்துக்கு நாளொன்றுக்கு ஆறு தடவைகள் பேருந்து சேவைகள் இடம்பெற்றன. 1984ஆம் ஆண்டு கிராம மக்கள் முழுமையாக இடம்பெயர்ந்த தன் பின்னர் எமது கிராமத்துக்கு பேருந்து சேவைகள் இடம் பெறவில்லை. 80க்கும் மேற்பட்ட குடும்பங்கள் எமது கிரா மத்தில் வசிக்கின்றன. எங்களுடைய தேவைகளுக்காக வவுனியா வடக்கு நெடுங்கேணி கிராமத்துக்கும், முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் நகரத்துக்கும் செல்வதற்கு பேருந்து சேவைகள் இன்மையால் நாம் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டு வருகிறோம். இது தொடர்பில் ஒட்டுசுட்டான் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் இதுவரை பேருந்து சேவைகள் ஆரம்பிக்கப்படவில்லை. எமது கிராமத்தில் இயங்குகின்ற பாடசாலைக்கு பேருந்து சேவை இடம் பெறுவதில்லை எனக் காரணங்காட்டி ஆசிரியர்கள் வருகை தருவதற்கு தயக்கம் காட்டுகின்றனர்.
நெடுங்கேணி, ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலைகளுக்கு நோயாளர்கள் செல்வதில் சிரமங்கள் உள்ளன. எனவே எமக்கான பேருந்து சேவையை வழங்குவதற்கு மாவட்டச் செயலர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர். (ப-ரி2)

## இறுதிக்கட்ட உர மானியம் இதுவரை வழங்கப்படவில்லை

### வவுனிக்குள விவசாயிகள் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, டிசெ. 30
முல்லைத்தீவு - வவுனிக்குளம் விவசாயிகள் இவ்வாண்டு காலபோக நெற்செய்கைக்கான இறுதிக்கட்ட மானிய உரம் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.
பயிர்ச்செய்கை தொடங்கி ஒரு மாதம் கடந்த நிலையிலும் உரம் வழங்கப்படவில்லை. இதன் காரணமாக நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது
வவுனிக்குளத்தின் கீழ் 3,500 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் உரம் உரிய காலத்தில் கிடைக்கவில்லை என்று அந்த விவசாயிகள் தெரிவித்தனர்.
இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.புனிதகுமாரிடம் கேட்டபோது;
வவுனிக்குளத்துக்கு பாண்டியன்குளம் கமநல சேவை நிலையத்தாலும், துணுக்காய் கமநல சேவை நிலையத்தாலும், உரம் வழங்கப்படுவது வழமை. பாண்டியன்குளம் கமநல சேவை நிலையத்தால் வவுனிக்குளத்துக்கான உரம் முழுமையாக வழங்கப்பட்டுள்ளது. துணுக்காய் கமநல சேவை நிலையத்தால் ஓரிரு நாள்களில் இறுதிக் கட்ட உரம் வவுனிக்குளம் விவசாயிகளுக்கு முழுமையாக வழங்கப்படும். கொரோனா அபாயம் மற்றும் அதனால் ஏற்பட்ட போக்குவரத்து நெருக்கடிகளும் உரங்களை உரிய காலத்தில் வழங்குவதில் தாமதத்தை ஏற்படுத்தியுள்ளன - என்றார். (ப-ரி2)

## பாரம்பரிய மருத்துவம் மூலம் தொற்றுநோய் கட்டுப்படுத்தல்

கொழும்பு, டிசெ. 30
நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும் கொத்தமல்லி சேர்ந்த பாரம்பரிய மருத்துவ தயாரிப்புகள் மூலம் இலங்கையில் கொரோனாத் தொற்று நோயை ஓரளவுக்கு கட்டுப்படுத்த முடிந்தது என ஆயுர்வேத மருத்துவ சங்கத்தின் தலைவர் வைத்தியர் பிரசாத் ஹெண்டவிதாரண தெரிவித்தார்.
சமூக நீதிக்கான தேசிய இயக்கம் நடத்திய கருத்தரங்கிலே அவர் இதனைத் தெரிவித்தார்.
மேலும், இலங்கையில் தொற்று நோயைக் கட்டுப்படுத்தும் பாரம்பரிய மருத்துவத்தைப் பயன்படுத்த ஒழுங்கமைக்கப்பட்ட திட்டம் ஒன்று இல்லாமையானது மிகப் பெரும் குறைபாடாகும் என அவர் சுட்டிக் காட்டினார். (ரி5-இ)

## பூங்காக்கள் அபிவிருத்தி

கொழும்பு, டிசெ. 30
நாட்டில் உள்ள தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.
இதற்கமைய, பேராதனை, கம்பஹா, ஹக்கல, சீதாவாக்க மற்றும் மிரிஜ்ஜவில ஆகிய தாவரவியல் பூங்காக்களை அடுத்த வருடத்தில் அபிவிருத்தி செய்வதற்கு 517 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ரி5)

## மிரட்டும் புதிய வைரஸ்

# கடுமையான சுகாதார பாதுகாப்பு அவசியம்!!

### ஹரித அளுத்கே எச்சரிப்பு

**கொழும்பு, டிசெ.30**

**பல நாடுகளில் தீவிரமடையும் புதிய வகை வைரஸ் தொடர்பில், இலங்கை மக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு கடுமையான சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் மருத்துவர் ஹரித அளுத்கே தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

எந்தவொரு புதிய வகை வைரஸ் தோன்றினாலும் அடிப்படை சுகாதார விதிமுறைகளை முறையாக பின்பற்றினால் அவற்றிலிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். இந்த வைரஸ் இளைஞர்கள் மத்தியிலேயே தீவிரமாகப் பரவலடைந்து வருகின்றது.

அத்தோடு வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அபாயம் அதிகமாகும். எனவே இது தொடர்பில் மக்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும்என்றார். (ற-இ)

## சட்டவிரோதமாக கொண்டுவரும் மஞ்சளை அழிக்குமாறு உத்தரவு

கொழும்பு, டிசெ.30

சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டு வரப்படும் மஞ்சளை தீயிட்டு அழித்து விடுமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறான மோசடிகளில் ஈடுபடும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்துமாறும் சுங்கப் பணிப்பாளர் நாயகம் மற் றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோருக்கு ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

மேலும், மதுசாரம் மற்றும் எத்தனோல் உற்பத்திக்கு சோளம் பயன்படுத்துவதை தடை செய்யும் வகையில், வர்த்தமானியை வெளியிடுமாறு கலால் ஆணையாளருக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். (வ-இ)



## அடக்கமா? தகனமா?

### நிபுணர் அறிக்கை விரைவில்

கொழும்பு, டிசெ.30

கொரோனாவால் உயிரிழந்தவர்களின் இறுதி சடங்குகள் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவின் அறிக்கை விரைவில் சுகாதார அமைச்சின் செயலாளரிடம் ஒப்படைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு உயிரிழந்தவர்களை அடக்கம் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பான விஞ்ஞான ரீதியான காரணங்களை பரிசீலித்து வருகின்றது. இலங்கையில் வர்த்தமானியில் வெளியான சுகாதார வழிகாட்டுதல்களின்படி, கொரோனாத் தொற்றினால் இறப்பவர்களின் உடல்கள் இறந்த 24 மணி நேரத்துக்குள் தகனம் செய்யப்படுகின்றன.

இந்நிலையில் கடந்த மாதம் இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் பேசிய சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி, கொரோனாத் தொற்றால் உயிரிழந்த அனைவரையும் தகனம் செய்வதற்கான முடிவை நிபுணர்க குழு மதிப்பாய்வு செய்யும் எனவும் தகனம் செய்வதற்கு அனுமதிக்கும் முடிவு மருத்துவ நிபுணர்களின் ஆலோசனையின் அடிப்படையிலேயே எடுக்கப்பட்டது எனவும் தெரிவித்திருந்தார். (வ-இ)

### தனிமைப்படுத்தல்

## சட்டத்தை மீறுவோரை கைதுசெய்ய சோதனை

கொழும்பு, டிசெ. 30

தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறுவோரை கைதுசெய்வதற்காக நேற்று முதல் மூன்று தினங்கள், நாடளாவிய ரீதியில் சிறப்புச் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக் கப்படவுள்ளன. அனுமதியின்றி ஒன்றுகூடல்கள் மற்றும் கூட்டங்களை நடத்துதல் ஆகியவற்றுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படுமென பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (ம)

## விமான நிலையங்கள் ஜனவரியில் திறப்பு

கொழும்பு, டிசெ.30

ஜனவரி மாத நடுப்பகுதியில் நாட்டின் விமான நிலையங்களை உத்தியோகபூர்வமாகத் திறக்கத் தீர்மா னிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

உக்ரைன் நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதன்படி, வணிக ரீதியிலான விமான சேவைகளையே உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கவுள்ளனர்.

அத்துடன், சுற்றுலாப் பயணிகளுக்காக நாடு மீண்டும் திறக்கப்படுவதன் காரணமாக புதிய கொரோனாக் கொத்தணி உருவாகும் என எவரும் அச்சப்படத் தேவையில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ற-இ)

## விவசாய உற்பத்திகளை சேமிக்க லிந்துலையில் மத்திய நிலையம்

### விவசாயத்துறை அமைச்சர் உறுதியளிப்பு

நுவரெலியா, டிசெ.30



விவசாய அபிவிருத்தி சங்கங்களின் அதிகாரிகள்கோரிக்கைக்குஅமைய லிந்துலை பகுதியில் விவசாயிகளின் விளைச்சலை சேகரிப்பதற்கு மத்திய நிலையமும், உர வகைகளை சேமிப்பதற்கு களஞ்சியசாலையும் அமைக்கப்படும் என விவசாயத்துறை அமைச்சர் உறுதியளித்தார்.

நுவரெலியா மாவட்டத்தில் லிந்துலை பிரதேசத்திலுள்ள விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், விவசாயிகள் மற்றும் விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் லிந்துலை யில் நடைபெற்றது.

இதன்போது, விவசாயிகளிடமிருந்து, விவசாய அமைச்சு நேரடியாகவே காய்கறிகளை கொள்வனவுசெய்வது குறித்தும், இத்திட்டத்தை முன்னெடுக்கும்போது எழக்கூடிய பிரச்சினைகள் சம்பந்தமாகவும் ஆராயப்பட்டதுடன், விவசாயிகளின் யோசனைகளும் உள்வாங்கப்பட்டன.

தாம் உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபட்டாலும் இடைத்தரகர்களே அதிக இலாபம் ஈட்டுகின்றனர்.

எனவே, இதற்கு எதிராக அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்துக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என இச்சந்திப்பில் விவசாயிகள் உறுதியளித்துள்ளனர். (ந)

## வெளியில் பெறப்படும் மருந்தால் கொரோனா தொற்றாது என்றில்லை


### *கேகாலை சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை*

கேகாலை, டிசெ.30

மருந்தைப் பயன்படுத்தினால் கொரோனாத் தொற்றாது என எண்ண வேண்டாம் என கேகாலை வரக்காபொலவை சேர்ந்த சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

உடுக்கும்புர ஒத்தினப்பிட்டிய பகுதியில் இந்து ஆலயம் ஒன்றுக்கு பொறுப்பாக உள்ள ஒருவர் கொரோனா மருந்து என மருந்து ஒன்றை விற்பனை செய்துள்ளார் அதனை அந்த பகுதியை சேர்ந்தவர்கள் கொள்வனவு செய்துள்ளனர். இதையடுத்து அந்தப் பகுதியிலிருந்து பல கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என வரக்காபொலவின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

இந்த மருந்தைப் பயன்படுத்தியதால் தங்களுக்கு ஆபத்து ஏற்படாது எனக் கருதி மக்கள் அலட்சியமாக செயற்படக்கூடிய ஆபத்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (வ-இ)



## சிறைக் கொத்தணி தொற்று அதிகரிப்பு

கொழும்பு, டிசெ.30

சிறைச்சாலை கொத்தணியுடன் தொடர்புடைய மேலும் 54 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளே இவ்வாறு தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, சிறைச்சாலை கொத்தணியின் எண்ணிக்கை 3ஆயிரத்து 909 ஆக அதிகரித்துள்ளது. (ச-இ)



# 2021 உங்கள் ராசிக்கு எப்படி?

## ஆங்கிலப் புத்தாண்டு பலன்கள்




இன்னும் சிறிது நாள்களில் கடக்க இருக்கும் 2020 ஆம் ஆண்டின் முடிவுக்காக எம்மில் பலரும் ஆர்வ மாகக் காத்துக் கொண்டிருக்கிறோம். இந்த வருடம் போல் எப்போதும் உலக மக்கள் துயரத்தைச் சந்தித் திருக்கமாட்டார்கள். 2020ஆம் ஆண்டைக் கடக்க இருக்கும் நிலையில், வர இருக்கும் புதிய 2021 ஆம் ஆண்டைப் பற்றிய பயமும் தொற்றிக் கொண்டுள் ளது. இந்த ஆண்டாவது உலக மக்களுக்கு சுபீட்சத் தைத் தருமா? என்கிற எதிர்பார்ப்பு ஒவ்வொரு வருக்கும் அதிகமாகவே இருக்கிறது என்று கூறலாம். அவ்வகையில் வர இருக்கும் 2021ஆம் ஆண்டுக் கான பலன்கள் இங்கு தரப்படுகின்றன.

மீன ராசிக்காரர்களுக்கு செல்ல இருக்கும் 2020ஆம் ஆண்டு நிறைய பிரச்சனைகளை கொடுத்திருக்கும். இதன் பிறகு வர இருக்கும் 2020ஆம் ஆண்டு எப்படி இருக்கும்? என்கிற எதிர்பார்ப்பு நிச்சயமாக அனைவ ரிடமும் இருக்கும். அவ்வகையில் மீன ராசிக்காரர் களுக்கு என்ன மாதிரியான பலன்கள் இருக்கும்? என்பதை தெரிந்து கொள்ள தொடர்ந்து இந்த பதிவை படியுங்கள். உங்களுடைய ராசிக்கு சனி பகவான் பதினோராம் இடத்தில் இருந்து கொண்டு, ஐந்தாவது இடத்தை பார்வையிடுகிறார். அங்காரகன் தொடக்கத் தில் இரண்டாம் வீட்டில் இருந்து, ஏப்ரல் மாதத்துக்குப் பிறகு பெயர்ச்சியும் ஆகிறார். ராகு மூன்றிலும், கேது ஒன்பதிலும் இருப்பார்கள். இந்த கிரக அமைப்புகளின் படி உங்களுக்கு சிறப்பான பலன்கள் இருக்கப் போகி றன.

**குடும்பம்:** குடும்பத்தை பொறுத்தவரை மீன ராசிக்கா ரர்களுக்கு சனி பகவானுடைய அருள் நிச்சயமாக இருக்கும். பூர்வீக சொத்துக்கள் மூலம் அனுகூல மான பலன்களைப் பெறும் காலம் இது. சகோதர, சகோதரிகளின் ஒற்றுமை சிறப்பாக அமைய இருக்கிறது. ஒருவ ரால் ஒருவர் முன்னேற்றத்தை காண்பீர்கள். அவர்க ளின் ஆதரவு எப்பொழுதும் சிறப்பாக அமையும். கணவன் மனைவிக்கு இடையே இருந்த சிக்கல்கள் நீங்கி, பரஸ்பர புரிதல் உண்டாகும். ஆரோக்கியத் திலும் சிறப்பான முன்னேற்றம் இருக்கும். ஆண்டின் நடுப்பகுதியில் சில சிக்கல்களை சந்திக்கலாம். அதனை தைரியமாக எதிர் கொண்டால் இந்த ஆண்டு குடும்பத்தில் மகிழ்ச்சிக்கு குறைவிருக்காது.

**வியாபாரம் மற்றும் தொழில்:** தொழில் மற்றும் வியா பாரத்தில் சூரியனுடன் புதன் இருக்கும் சேர்க்கையா னது சிறப்பான பலன்களைக் கொடுக்கும். ஆகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதங்களில் உங்களின் கடின உழைப்புக்கு நல்ல அதிர்ஷ்டங்கள் கிடைக்கப்பெறும். இதுவரை மந்த நிலையில் இருந்த வியாபாரம் சூட சூடு பிடிக்க தொடங்கி விடும். இதன் மூலம் நல்ல லாபம் காண்பீர்கள். உங்களுக்குக் கீழ் பணிபுரிபவர்களிடம் அனுசரித்து செல்வதன் மூலம் சிறப்பான முன்னேற் றத்தை காணலாம். அவர்களுக்கு தேவையான உத விகளை செய்து கொடுத்தால் உச்சத்தைத் தொடுவீர் கள். தொழில் மற்றும் வியாபாரத்தை விரிவுபடுத்தும் திட்டம் சாதகமான பலன்களைக் கொடுக்கும்.

**உத்தியோகம்:** உத்தியோகத்தை பொறுத்தவரை மீன ராசிக்காரர்களுக்கு மிகவும் யோகமான காலமாக அமைய இருக்கிறது. திடீர் அதிர்ஷ்டங்கள் மற்றும் யோகமும் வந்து சேரும். நினைத்தபடி நினைத்த இடத்துக்கு வேலையும், இடமாற்றமும் அமைய காத் திருக்கிறது. ஒரு சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு கள் கிடைக்கப்பெறும். உங்கள் திறமையை மேலதி காரிகளும், உங்களுடன் பணிபுரியும் சக பணியாளர் களும் புரிந்து கொள்வதற்கான சரியான சந்தர்ப்பம் அமையும். அதனை சரியாக பயன்படுத்திக் கொண் டால் வெற்றி நிச்சயம்.

**பொருளாதாரம்:** பொருளாதார ரீதியான முன்னேற்றம் சிறப்பாக அமைய இருக்கிறது. படிப்படியான முன் னேற்றத்தைக் காண்பீர்கள். ஒவ்வொரு மாதமும் ஏற்றத்துடன் காணப்படும். உங்களுடைய வருமானம் அதிகரிக்கக்கூடிய வாய்ப்புகளும் உருவாகும். கால மும், நேரமும் சரியாக இருக்கும் பொழுது, திடீர் ராஜயோகம் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உண்டு.

**பெண்களுக்கு:** பெண்களைப் பொறுத்தவரை மன அழுத்தத்தில் இருந்து சுலபமாக விடுபடும் காலம் என்று கூறலாம். உங்கள் மனதில் அழுத்திக் கொண்டு இருந்த விஷயங்கள் எல்லாம் தெளிவாகி, லேசாக உணர்வீர்கள். தன்னம்பிக்கையும், தைரியமும் அதி கரிக்கும். சுபகாரிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உங்கள் குணத்திற்கு ஏற்ப நல்ல பொருத்தமான வரன்களும் அமையும். திருமணமான பெண்களுக்கு கணவனுடன் இருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கி நல்ல ஒற்றுமை இருக்கும்.

பரிகாரம்: மீன ராசிக்காரர்கள் இயலாதவர்களுக்கு வஸ்திர தானம் செய்ய நல்ல பலன்கள் கிடைக்கப் பெறும். வியாழன் கிழமையில் மஞ்சள் நிற பொருளை பயன்படுத்துவதால் அதிர்ஷ்டம் ஏற்படும். சனிக்கிழ மையில் ஹனுமனுக்கு வடை மாலை சாற்றி வழிபட் டால் நினைத்ததெல்லாம் நடக்கும்.

# திரிகோணாசனம்




'திரி' என்றால் மூன்று 'கோண' என்றால் கோண வடிவு எனும் பொருள்கொண்டு இவ்வாசனம் உச்ச நிலையில் முக்கோணம் போல் தோற்றமளிப்பதனால் இப்பெயர் வந்தது.

செய்(படி)முறைகள்:


1. ஆரம்ப நிலையில் நேராக நிற்கவும். (தடாசனம்) இந்நிலையில் சாதாரண சுவாசம் கொள்க.
2. 2. இடக்காலிலிருந்து வலக்காலை ஒரு மீற்றர் தூரம் வரை இடைவெளிவிட்டு அகலமாக வைத்துக் கொள்ள வும். பின்னர் இரு கைகளையும் மூச்சை இழுத்த வண்ணம் தோள்பட்டை அளவுக்கு பக்கவாட்டில் உயர்த்தவும்.
3. மூச்சை வெளிவிட்ட வண்ணம் வலக்கைவிரல்கள் வலது பாதத்தின் கணுக்காலைத் தொடும் வரை வலது பக்கவாட்டில் வளைத்து இடக்கையை மேலே உயர்த்தி வலக்கையும் இடக்கையும் ஒரே நேர்கோட்டில் அமையு மாறு வைத்திருக்க வேண்டும். இடது உள்ளங்கை முன்னோக்கியிருக்க தலையை திருப்பி பார்வையை இடது கைவிரல்களின் மேல் இருக்கும்படி வைத்து சாதாரணமாக சுவாசிக்கவும். உச்ச நிலை
4. மூச்சை இழுத்தவாறு முன்பு போல் கைகளை கிடை மட்டத்துக்கு சமாந்தரமாக கொண்டு வரவும்.
5. மூச்சை வெளிவிட்டவாறு கைகளை கீழே விடவும். பின் வலக்காலை இடக்காலுக்கு அருகில் கொண்டு வந்து ஆரம்ப நிலைக்கு வரவும்.

**குறிப்பு** : இதே போல் மாற்றுப் பயிற்சியாக மறுபுறமாகவும் (இடக்கால்) செய்தல் வேண் டும். ஒவ்வொரு பக்கமும் தலா மூன்று தடவைகள் செய்தல் வேண்டும். உடல் உபாதைகள் உள்ளவர்கள் தகுந்த குருவின் ஆலோசனையுடனேயே செய்தல் வேண்டும். மேலதிக விளக்கங்கள் தேவைப்பட்டால் 0771041455 என்ற அலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

**பலன்கள்:**

உடம்பு முழுவதும் குறிப்பாக முதுகுத்தண்டும் தசைகளும் நீட்டப்படும். மார்பு, எலும்புகளுக்கு இடையிலுள்ள தசை கள், தொடைகள், கெண்டைக்கால்கள், தொடைத்தசை நார்கள் நன்கு நீட்டப்பட்டு வலிமை பெற்றுத் தளர்த்தப்படு கின்றன. கபச்சுரப்பி மற்றும் அட்ரினல் சுரப்பி என்பன நன்கு தூண்டப்படுகின்றன.

சிறுநீரகங்கள் மற்றும் வயிற்றுப் புறத்திலுள்ள உறுப்புக்கள் (கல்லீரல், மண்ணீரல், பித்தப்பை, சதையி முதலியவை) நன்கு அழுத்தப்பட்டு நன்கு செயற்படும். தேவையற்ற இடுப்புப்புறத் தசைகள் மற்றும் கொழுப்புக்கள் கரைக்கப்படு கின்றன. கண்பார்வைக் குறைபாடு, காதடைப்பு மற்றும் சுவாசக் கோளாறுகள் என்பன நீக்கப்படும். நீரிழிவு, கீல் வாதம், பக்கவாதம், கூன் முதுகு, நாரிப்பிடிப்பு, தசைப்பி டிப்பு, கண்டமாலை முதலிய பல உபாதைகள் குணமாகும்.




தொடரும்...

ஸ்ரீ. நதிபரன் (யோகா போதனாசிரியர்)



# இன்றைய நாள்

**மேடம்:** வெற்றிகரமான நாள். அலுவலகப் பணியில் திருப்தி உண்டாகும். புதிய விஷயம் ஒன்றைத் தொடங்கி மன நிறைவு பெறுவீர்கள். அலைச்சல் இருக்கும். காதலர்களுக்கு மனநிறைவு ஏற்படும்.

**இடபம்:** சிறு ஏமாற்றம் வந்து நீங்கும். நேற்றைய மனஅழுத்தம் தீரும். மனதுக்கு இனிய நாள். மகனால் மன வருத்தம் ஏற்படலாம். பழைய சம்பவங்கள் நினைவுக்கு வரும்.

**மிதுனம்:** தைரியமாகச் செயலாற்றி அதில் வெற்றியும் காண்பீர்கள். மனதில் நம்பிக்கை அதிகரிக்கும். விருந்தினர்களை உபசரிப்பதில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்:** உடல் நலம் சீராகும். கடன் பிரச்சினைகளால் திணறுவீர்கள். பணியிடத்தில் கோபத்தால் பிரச்சினை வராமல் காத்துக்கொள்ளுள்கள்.

**சிம்மம்:** பணியாளர்களைப் பொறுத்தவரை நல்லநாள். பொறுப்பு அதிகமாகும். வாழ்வில் சிறிதளவு முன்னேற்றம் அடைய முயற்சி செய்வீர்கள். எதிரியின் பலம், பலவீனத்தை அறிந்து கொள்வீர்கள்.

**கன்னி:** மனைவி வழி உறவினர்களின் மூலம் நல்ல செய்தி உண்டு. சொத்து விற்பது பற்றிய பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். வருமானம் ஈட்டுவீர்கள். புகழும், விருதும் கிடைக்கும்.

**துலாம்:** தெய்வ நம்பிக்கையை துணையாகக் கொண்டு நிம்மதி அடைவீர்கள். உற்சா கம் மனதை நிறைக்கும். முயற்சியில் ஏற்பட்ட தோல்வி மாறும். சிலருக்கு வீண் அலைச்சல் உண்டாக வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும். நட்பு புதுப்பிக்கப்படும். சிலருக்கு கடந்த நாள்களுடைய நினைவு தூண்டப்படும். முயற்சிகள் காரணமாகப் பெரிய நன்மை நிகழும்.

**தனுசு:** சற்று தளர்ச்சி தோன்றும். மகான்களின் தரிசனம் கிடைக்கும். நினைத்ததை முடிக்க உறவினர்கள் கைகொடுத்து உதவுவார்கள். எடுத்த முயற்சி திருப்தி தரும்.

**மகரம்:** மூத்தவர்களின் உடல்நலனில் கவனம் செலுத்துங்கள். எதிர்பாராத வகையில் நண்பர்களின் சந்திப்பு நிகழும் நாள். மற்றவர்களுக்கு நன்மைகளைச் செய்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

**கும்பம்:** புதிய உற்சாகம் பிறக்கும். பெண்களுக்கு மனப்பக்குவம் உண்டாகும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். நட்பு வட்டம் விரிவடையும்.

**மீனம்:** கணவரின் மனநிலையை அறிந்து அதற்கேற்ப செயல்படுவீர்கள்.. எதிர்பார்த்த பதவி உயர்வு, சம்பள உயர்வு தாமதமாகும். முன்பிருந்த பயங்கள் நீங்கி நிம்மதி அடைவீர்கள்.

# சிவனொளிபாதமலை பருவகாலம் ஆரம்பம்!

கொழும்பு. டிசெ.30

சிவனொளிபாதமலை பருவகால யாத்திரை பூரணை தினமான நேற்று ஆரம்பமாகியது சிவனொளிபாத மலைக்கான புனித சின்னங்களை எடுத்துச்செல்லும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இரத்தினபுரி பெல்மதுளை கல்பொத்த ரஜமகா விகாரையிலிருந்து புனித விக்கிரகங்கள் நல்லதண்ணி பாதை வழியாக கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு மலையுச்சிக்கு எடுத்துச்செல்லப்பட்டன.

இந்த யாத்திரைக்கு ஒரே தடவையில் 200 பக்தர்களுக்கு மாத்திரமே அனுமதியளிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



யாத்திரையில் பங்கேற்கும் அடியார்கள் தங்களது பிரதேச செயலகங்களில் பதிவு செய்வதுடன், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் தாம் தனிமைப்படுத்தப்படுத்தலுக்கு உட்படுத்தப்படவில்லை என்பதை உறுதிப்படுத்திய பத்திரமொன்றையும் வைத்திருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ற-இ)

# ரயில் சேவை கொத்தணி உருவாகும் அபாயம்

## பயணத்தின்போது விதிகளை கடைப்பிடிக்குமாறு வேண்டுகோள்

கொழும்பு, டிசெ.30

அலுவலக ரயில்களில் பயணிகள் சமூக இடைவெளியை பேணுவது சாத்தியமற்றதாக உள்ளது.

இந்நிலைமை தொடர்ந்தால் ரயில் சேவை கொத்தணி உருவாகும் வாய்ப்புள்ளது என ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்க பிரதான செயலாளர் கசுன் சாமர தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சேவையில் ஈடுபடும் அலுவலக ரயில்களில் சமூக இடைவெளி இன்றி பயணிகள் நெருக்கமாகவே பயணம் செய்கின்றனர். இவ்வாறான நிலை தொடர்ந்தால் ரயில் சேவை ஊடாக வைரஸ் பரவலின் கொத்தணி உருவாகும்.

பொதுமக்கள் பாதுகாப்பான முறையில் ரயில் சேவையைப் பயன்படுத்தும் திட்டத்தை போக்குவரத்து அமைச்சு செயற்படுத்த வேண்டும் - என்றார். (ச-இ)



# தேயிலை தொழிற்சாலையில் பெரும் தீ விபத்து

கொழும்பு, டிசெ.30

பலாங்கொட ஒலுகன்தொட்ட பகுதியில் அமைந்துள்ள தேயிலைத் தொழிற்சாலை ஒன்றில் பெரும் தீ விபத்து நேற்று ஏற்பட்டுள்ளது. இதில் பெருமளவு தேயிலைக் கொழுந்துகள் தீயில் எரிந்து நாசமாகின எனவும் அவற்றின் பெறுமதி 8 லட்சத்துக்கும் அதிகமாகும் எனவும் தொழிற்சாலை உரிமையாளர் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என பொலிஸார் விசாரணையில் தெரிவித்தனர். (ச-இ)

# திருமலையில் கனமழை; 1,911 குடும்பங்கள் பாதிப்பு

திருகோணமலை, டிசெ.30

திருகோணமலை மாவட்டத்தில் பெய்துவரும் கனமழை காரணமாக ஆயிரத்து 911 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 617 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள தெரிவித்தார்.

இவர்களுள் பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பிரிவில் மட்டும் ஆயிரத்து 104 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 849 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை மாவட்டத்தில் ஆயிரத்து 380 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 829 பேர் உறவினர் வீடுகளில் தங்கியிருந்துள்ளனர்.

4 வீடுகள் முழுமையாகவும் 43 வீடுகள் பகுதியளவிலும் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட வீடுகளுக்கான இழப்புக்கள் குறித்து பிரதேச செயலகம் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டு உரிய அமைச்சின் கவனத்துக்கு கொண்டு செல்லப்படும்.

முதல்கட்டமாக பாதிக்கப்பட்ட வீட்டுடமையாளர்களுக்கு 10 ஆயிரம் ரூபா முற்பணம் வழங்கப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ரு-இ)

# கொள்வனவில் முறைகேடுகள்; தலையிட்டுத் தடுக்க உத்தரவு

கொழும்பு, டிசெ.30

மஞ்சள், சோளம் உள்ளிட்ட அறுவடைகளை விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யும்போது இடம்பெறும் முறைகேடுகளைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அத்துறைக்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சருக்கும் அதிகாரிகளுக்கும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அறிவுறுத்தியுள்ளார்.

விவசாயிகள் மஞ்சள் மற்றும் சோளம் பயிர்ச்செய்கையை வெற்றிகரமாக விரிவுபடுத்தியுள்ளனர்.

எதிர்வரும் பெரும்போகத்தில் அறுவடையை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

இதில் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டும். வர்த்தகர்கள் மொத்தமாக கொள்வனவு செய்யும்போது இடம்பெறும் முறைகேடுகளைத் தடுக்க அரசாங்கம் முழுமையாக தலையிட வேண்டும் என்று ஜனாதிபதி சுட்டிக் காட்டியுள்ளார். (வ-இ)

"தந்தை சொல்மிக்க மந்திரமில்லை"

# மறக்க முடியாத ஈராண்டு நினைவுகள்

## சபாரட்ணம் செல்வராசா



அன்னை மடியில்
28.07.1943

ஆண்டவன் அடியில்
23.12.2018


[திதி: ஆர்த்திரா பூர்வ பிரதமை திருவாதிரை]
[30.12.2020]

ஈராண்டு ஆனபோதும் - எங்கள்
ஈரவிழிகள் இன்னும்
காயவில்லை - அப்பா
எத்தனை உறவுகள்
ஆறுதல் சொன்னாலும்
உங்கள் அன்பிற்கு ஈடாகுமா!
நாளும் பொழுதும் எங்களுக்காகவே
எங்களுடனேயே வாழ்ந்தீர்கள் - அப்பா
என்றும் எங்களுக்கு வழி காட்டியாக
இருப்பீர்கள் என்ற
ஆறுதலுடன் வாழ்கின்றோம்
காலங்கள் கடந்தாலும்
என்றும் உங்களை
எங்கள் உள்ளத்தில்
வைத்து பூஜிப்போம் - அப்பா

**என்றும் உங்கள் நினைவுகளுடனேயே**
**வாழும் உங்கள்**
**குடும்பத்தினர்.**
**வழுக்கம்பரை, சுழிபுரம்.**

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்தி பிரார்த்தனையும்



அன்னை மடியில்
02 . 05 . 1945

இறைவன் அடியில்
30 . 11 . 2020

## அமரர்
## உயர்திரு. முருகேசு பத்மநாதன் (J.P)

**(நல்லதம்பி, ஓய்வுநிலை பொறியியலாளர், இலங்கை மின்சார சபை)**

கடந்த 30.11.2020 திங்கட்கிழமை இறைபதம் அடைந்த எங்கள் குடும்ப தலைவர் முருகேசு பத்மநாதன் அவர்களின் வீட்டுக் கிருத்திய கிரியைகள் இன்று (30.12.2020) புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரின் இறுதிச்சடங்கில் கலந்து எங்கள் துக்கத்தில் பங்கு கொண்டு ஆறுதல் அளித்து உதவிகள் புரிந்தவர்கள், சமய குருமார்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள், இளைஞர்கள், அயலவர்கள், வைத்தியர்கள், தாதிமார்கள், தொலைபேசி, தந்தி மற்றும் பல வழிகளிலும் அனுதாபங்கள் தெரிவித்தவர்கள், அனைவருக்கும் எங்கள் குடும்பம் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**சங்கானை வீதி,**
**சித்தன்கேணி.**

**குடும்பத்தினர்.**

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் உயர்திரு. முருகேசு பத்மநாதன் (J.P)

**(ஓய்வுநிலை பொறியியலாளர் இலங்கை மின்சார சபை)**

நற்செயல்களால் மேன்மையுற்றவர்கள் மக்கள் மனங்களில் வாழ்வர். அவர்தம் புகழ் காலத்தைக் கடந்து நிலைபெற்றிருக்கும். அத்தகு தன்மைமிக்கவர் மறைந்த மு.பத்மநாதன் அவர்களாவார். சித்தன்கேணி ஸ்ரீ மகாகணபதிப் பிள்ளையார் ஆலயப் பரிபாலன சபைத் தலைவராக 1998 முதல் 2015 வரை பதினேழாண்டுகள் பணிசெய்தார். 2015 இலிருந்து மறையும்வரை உபதலைவராகத் திகழ்ந்தார்.

தெளிவான நோக்கு, நேர்த்தியான திட்டமிடல், நேர்படக்கூறும் பண்பு, வசீகரமான முகம், மிடுக்கான நடை என பண்பிலும், தோற்றப் பொலிவிலும் அனைவரையும் தன்பால் கவர்ந்த தலைவர். 2002 இல் ஆலய கும்பாபிஷேகமானது சிறப்பாக நடைபெற முன்னின்று செயற்பட்டார். இவரது தலைமைத்துவக் காலத்திலேயே ஆலய பன்நோக்கு மண்டபம் நிறுவப்பெற்றது.

ஆலயத்தின் உடைமைகளைப் பேணிப் பாதுகாப்பதில் கரிசனையோடு இயங்கினார். இளைஞர் முதல் பெரியோர் வரை அனைவரதும் நன்மதிப்பைப் பெற்றிருந்தார். முப்பொழுதும் ஆலய செயற்பாட்டில் அர்ப்பணிப்போடு ஈடுபட்டவர்.

உயர்ந்த குடும்பத் தலைவராய், நற்புதல்வர்களுக்குத் தந்தையாய், தம் மக்களைச் சீரிய வழியில் நெறிப்படுத்தி அழகுபார்த்தார். அன்பு மனையாளுடன் ஊரில் நடைபெறும் நிகழ்வுகளைச் சிறப்பித்தார்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்" என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்க நன்மக்கட் பேறும் நற்செயல்களால் புகழும் பெற்று 'தக்கவராக' மிளிர்ந்தார்.

புகழோடு தோன்றிய அன்னாரின் பெரும்பிரிவு எமக்கு பேரிழப்பாகும். மண்ணில் பிறந்தார் மறைவது திண்ணம் என்பதற்கிணங்க வாழ்வாங்கு வாழ்ந்த பத்மநாதப் பெரியனை என்றும் நினைவிற்கொள்வோம்.

ஓம் சாந்தி !

**அவர் நினைவுடன்**
**சித்தன்கேணி மகா கணபதிப்பிள்ளையார் ஆலய**
**பரிபாலன சபையினர்.**

---

# மரண அறிவித்தல்



மலர்வு
19 . 08 . 1929

உதிர்வு
28 . 12 . 2020

## அம்பலம் இராசையா

சிறுவிளான் இளவாலையை சேர்ந்த அம்பலம் இராசையா அவர்கள் 28.12.2020 திங்கட்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலம் - மாணிக்கம் தம்பதியரின் பாசமிகு புதல்வரும், காலஞ்சென்ற இராசம்மா (திருநெல்வேலி), முத்தையா (மாரீசன்கூடல்) ஆகியோரின் அருமை சகோதரரும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், கண்மணி, நித்தியானந்தம், காலஞ்சென்ற ஆனந்தர், ஏரம்பு (France), பரதகுலராணி (கனடா), கமலாதேவி (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், பத்மசேகரன் (கனடா) மல்லிகாரதி, ஜெயபாலமனோகரன் (கனடா), சரோஜினி (கனடா), பாஸ்கரன் (ஜேர்மனி), சந்திரசேகரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற சுதாகரன், பிரபாகரன் (ஜேர்மனி)ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுகுணா, யோகரட்ணம், ராஜபரணி, ஸ்ரீகுமார், கோகிலவாணி, சுதாயினி ஆகியோரின் அன்பு மாமனாரும், கிருஷ்ணவதனி, சுமதி, ஜெயக்குமார், ராஜ்குமார் சுஜிவன், சஜீவன், கார்த்தீபன், கபிலன், கீர்த்தனா, நோர்மன், நிர்மல், சிந்துஜா, சௌமியா, நிரோஜன், டினோஷா, நிவேதா, ஜனோஜ் ஆகியோரின் பாசமிகு பேரனும், மகிஷாயினி, சாமுத்திரிகா, நிசாரிகன், ஈத்தன், மாயா, ஆதிரன், அராயா, லவாயா, லிசா, லியா ஆகியோரின் பாசமிகு பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 31.12.2020 வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**தகவல்: மல்லிகாரதி (மகள்)**
**சிறுவிளான், இளவாலை.**
**நி.கிருஸ்ணவதனி (பேர்த்தி)**
**(ஆசிரியர்,** St.Anns Colombo-13)
**க.நித்தியானந்தன்**
**(கிராம நிலதாரி உத்தியோகத்தர் கொழும்பு பிரதேச செயலகம்)**
No.15, Walls Lane, Colombo-15

# கேதீச்சர காணியை அபகரிக்க முயற்சி!

மன்னார், டிசெ.30

மன்னார் திருக்கேதீச்சர ஆலயத்துக்குச் சொந்தமான காணியை மாதோட்ட விகாரையின் பிக்கு அபகரிக்க முயற்சிக்கின்றார் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படும் நிலையில், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் நேற்று அங்கு நேரில் சென்று ஆராய்ந்தார்.

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்துக்குச் சொந்தமான 5 ஏக்கர் காணி சைவ மங்கையர் கழகத்துக்கு 99 வருடக் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டது. இந்தக் காணி நீண்டகாலமாக திருக்கேதீச்சர ஆலயத்தின் பராமரிப்பில் இருந்துள்ளது. நாட்டில் ஏற்பட்ட இடம்பெயர்வு காரணமாக பின்னர் அங்கு இராணுவம் நிலை கொண்டிருந்தது. அதன்பின்னர் அந்தக் காணி மீளவும் திருக்கேதீச்சர ஆலயத்திடம் கையளிக்கப்பட்டது.

தற்போது அங்கு ஒரு விகாரை அமைக்கப்பட்டுள்ளது. அந்த விகாரை ஆலயக் காணியிலும், தனியார் காணியிலும் அமைக்கப்பட்டுள்ளது. மிகுதிக் காணி ஆலய நிர்வாகத்தின் பராமரிப்பில் இருந்த நிலையில், கடந்த சில தினங்களாக விகாரையின் பிக்கு ஏனைய காணியையும் அபகரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனுக்கு ஆலய நிர்வாகத்தினர் தெரியப்படுத்தியதை அடுத்து, அவர் நேரில் சென்று நிலைமையை ஆராய்ந்தார். மன்னார் பொலிஸார், ஆலய நிர்வாகத்தினர், ஆலயப் பிரதம குரு ஆகியோரும் உடன் சென்றிருந்தனர்.

நிலைமைகளை ஆராய்ந்த நாடாளுமன்ற உறுப்பினர், காணி அபகரிப்புக்கு எதிராகத் துரித நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். (எ-56)

# பாம்பு தீண்டியதால் இருவர் சிகிச்சையில்!

சாவகச்சேரி, டிசெ.30

பாம்பு தீண்டிய நிலையில் இருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். 3 வயதுச் சிறுவன் ஒருவனும், முதியவர் ஒருவருமே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பளை, கச்சார்வெளியைச் சேர்ந்த முதியவர் ஒருவரே பாம்பால் தீண்டப்பட்டுள்ளார். நேற்று அதிகாலை படுக்கையில் இருந்து எழுந்து வந்த முதியவரை பாம்பு தீண்டியு ள்ளது.

மிருசுவில், கெற்பேலியில் வீட்டு வளவில் விளையாடிக் கொண்டிருந்த 3 வயதுச் சிறுவனைப் பாம்பு தீண்டியு ள்ளது. இவர்கள் தற்போது யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தற்போது மழையுடன் கூடிய கால நிலை நிலவும் நிலையில், தாழ் நிலங்களில் வெள்ளம் தேங்கியுள்ளது. அதனால் பாம்புகளும், விச ஜந்துக்களும் குடியிருப்புக்களுக் குள்புக ஆரம்பித்துள்ளன. தென்மராட்சியில் அண்மைக் காலங்களில் அதிகளவானோர் பாம்புகளால் தீண்டப்பட்டுள்ளனர். அதனால் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. (த-9)

**வீடு வாடகைக்குத்தேவை**

கொக்குவில், கோண்டாவில், இணுவில் மருதனார் மடம் பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: - 077 728 4027

**வாடகைக்கு**

யாழ் வைத்தியசாலை வீதியில் 1 ஆம் மாடிக் கட்டடம் வாடகைக்குண்டு. கடைகள், அலுவலகங்களுக்கு ஏற்றது

077 828 1956

**விற்பனைக்கு**

யாழ். பிறவுண் வீதியில் 6 பரப்புக் காணியும் 4 பரப்புக் காணியும், யாழ். நாவலர் வீதியில் $2\frac{1}{2}$ பரப்பில் காணியும் $2\frac{1}{2}$ பரப்பில் காணியும் வீடும், யாழ். கந்தர்மடம் சந்திக்கு அண்மையில் 4 பரப்பு காணியும் 3 பரப்புக் காணியும், யாழ். வைமன் வீதியில் 4 பரப்புக் காணியும் 6 பரப்ப காணியும், யாழ். பரமேஸ்வரா சந்திக்கு அண்மையில் 3 பரப்பு காணியும் வீடும் 6 பரப்பு காணியும் விற்பனைக்குண்டு.

077 723 2535

## மரண அறிவித்தல்



தோற்றம்: 20 . 08 . 1963

மறைவு: 28 . 12 . 2020

### திரு.சிவா சந்தாணம் (அன்ரன் றாஜ்)

(ஓய்வுபெற்ற பொலிஸ் திணைக்கள ஊழியர், யாழ்ப்பாணம்)

செட்டிகுளத்தை பிறப்பிடமாகவும் மாரிசன்கூடல் இளவாலையை வதிவிடமாகவும் கொண்ட திரு. சிவா அவர்கள் 28.12.2020 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் பெப்பெற்றுனா ஜஸ்மின்(துங்கமலர்)இன் கணவரும், காலஞ்சென்றவர்களான சந்தாணம் லக்ஸ்மி தம்பதியரின் கனிஸ்ர புதல்வனும், காலஞ்சென்ற றோமாம்பிள்ளை, ராசாத்தி அம்மா தம்பதியரின் மருமகனும், பூவதி, தெய்வானை, காலஞ்சென்றவர்களான சக்திவேல், மணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், விஜயகாந்தன், பிறேமகாந்தன், யேசுமலர், காலஞ்சென்ற பொன்மலர் ஆகியோரின் மைத்துனரும், ஷாள்சன், ஷாள்சினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரபாளினி (ஆசிரியை) மரிய நிரோஜன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், மிஸ்றிக்காவின் அன்பு அம்மப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (30.12.2020) புதன்கிழமை மதியம் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து எடுத்து செல்லப்பட்டு மாரீசன்கூடல் புனித கயித்தார்ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின் மாரீசன்கூடல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 0770060037, 0768034944

தகவல்: குடும்பத்தினர்

காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடத்தும்

**தெய்வீகக் கலையரங்கு**

எமது கலாமன்றத்தால் திருவெம்பாவைக் காலத்தில் நடத்தப்பட்டு வரும் தெய்வீகக் கலையரங்கு அர்ப்பண நிகழ்வு கடந்த 26.12.2020 ஆம் திகதி தற்போதைய நிலையினைக் கருத்தில் கொண்டு பூசை வழிபாட்டுடன் மிகவும் எளிமையாகவும் சிறப்பாகவும் சுகாதார நடை முறைகளுக்கு அமைவாக நடை பெற்றது என்பதை, கலாமன்ற வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்கிவரும் அனுசரணையாளர்கள், கலைஞர்கள், அறிஞர்கள், கலாரசிகப் பெருமக்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

(இதில் திருவாசகக் குயில் லீலாவதி இராசரத்தினம் அவர்களின் திருவாசகத் தேனிசையும் இடம்பெற்றது.)

கிழவன்காடு கலாமன்றத்தினர்

## மரண அறிவித்தல்



### இராமலிங்கம் தாமோதரம்பிள்ளை

யாழ். உடுப்பிட்டி, கிளானையைப் பிறப்பிடமாகவும் மூளாயை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்டவரும் Madhu Farm, Vasantha Textiles நீராவியடி ஆகியவற்றின் முன்னாள் உத்தியோகத்தருமான இராமலிங்கம் தாமோதரம்பிள்ளை 29.12.2020 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை இராமலிங்கம் (முன்னாள் பா.உ. Uduppiddy - Pointpedro), மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும் மூளாயைச் சேர்ந்த காலஞ்சென்ற மயில்வாகனம் - மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், சிவராஜரா ஜேஸ்வரியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற அனுரதி ( பிரதேசசபை உத்தியோகத்தர் ) மற்றும் ரதிக்கா (காரைநகர் பிரதேசசபை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சசிதரன் ( முன்னாள் உத்தியோகத்தர் Anna Coffee) அரவிந்தன்( ஆசிரியர், J/Karainagar Hindu College) ஆகியோரின் அன்பு மாமனாரும் அபினா, கிருஷன், அர்ச்சயன், அர்ச்சுதன் ஆகியோரின் பாசமிகு தாத்தாவும், பொன்னம்பலம் (R P master), இராமக் கிருஷ்ணன், மீனாம்பாள் மற்றும் காலஞ்சென்றவர்களான ஈஸ்வரி, பரமேஸ்வரி, பரமேஸ்வரன், தசரதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், தனபாக்கியவதி, சிவகுமாரன் (Nitchingham), சுலோசனா மற்றும் காலஞ்சென்றவர்களான Dr.பாலசுப்பிரமணியம், இரகுநாதன் (Mackwoods Ltd) ஆகியோரின் மைத்துனரும், சின்னப்புராசர், சிவசோதி லட்சுமிதேவி, சிவயோகலட்சுமிதேவி மற்றும் காலஞ்சென்றவர்களான குமாரராஜன், முருகசோதிராசர், சிவராஜலட்சுமிதேவி, குமரகுருபரன், சிவபாக்கியலட் சுமிதேவி, சிவானந்த லட்சுமிதேவி ஆகியோரின் அன்புச் சகலரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.12.2020 செவ்வாய்க்கிழமை மூளாயில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: ரதிக்கா (மகள்) 077 647 3794
சசிதரன் (மருமகன்) 077 742 7207
மீனாம்பாள் (சகோதரி) 077 645 0719

## மரண அறிவித்தல்



தோற்றம் . 01 . 11 . 1948

மறைவு . 29 . 12 . 2020

### வைரமுத்து நவரத்தினம் (வைரக்கண்டு)

கட்டப்பிராயை பிறப்பிடமாகவும் ஆவரங்காலை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து நவரத்தினம் (வைரக்கண்டு) நேற்று (29.12.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து கண்ணம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற மனோன்மணியின் (யாழ் போதனா வைத்திய சாலை - தாதியர்) பாசமிகு கணவரும், காலஞ்சென்ற விசாலாட்சியின் அன்புத் தம்பியும், ரதிராணி, சின்னத்தங்கச்சி ஆகியோரின் அன்பு அண்ணாவும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம், குகபாலசந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், செல்வேந்திர ராசா, குலம், கலா பத்மினி, இராஜகுமாரி, நாகேந்திரன் (ரகு) சுந்தர ரூபன் (கண்ணன்) சுரேஸ்காந்தன் (சுரேஸ்) தாமினி, கிருசாந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஆவரங்காலில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (30.12.2020) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் ஆவரங்கால் கரதடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கனாவத்தை ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.

தகவல்: குடும்பத்தினர். 077 271 9032

# சேவை நலன் பாராட்டு

Best Wishes Best Wishes



ஆசிரியை
**திருமதி.லலிதா பிரபாகரன்**
(பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியர்)
சேவைக்காலம்-31 வருடங்கள்



ஆசிரியை
**திருமதி.தவேந்திராதேவி சிவகுருநாதன்** B.Sc(Bio), PGDE, MED
சேவைக்காலம்-36 வருடங்கள்



ஆசிரியை
**திருமதி.ஞானரட்ணம் ஆனந்தராஜா** B.Sc,PGDE,
சேவைக்காலம்-32 வருடங்கள்

இளவாலை மண்தந்த இமயங்கள் நீங்கள் – எம்
கல்லூரித்தாய்க்கு புகழ்மாலை சூடிடவே
இளம் பெண்களின் அறிவொளிக் கண்களானீர்
இதம் நிறைந்த உம் சேவைதனை இனிதே வாழ்த்துகிறோம்

Best Wishes

கணித விஞ்ஞான அறிவூட்டி – அகிலத்தில்
கடமை கட்டுப்பாட்டுடன் அரும் சேவையாற்றி
அகிலமதில் எம் சிறார்கள் உயர்வுக்காக
அயராது உழைத்த உம் சேவையைப் போற்றுகிறோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/இளவாலை கன்னியர்மடம் ம.வி**
**இளவாலை.**

---

## யா/சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயம்

# மணிவிழா நாயகியின் சேவை நலன் பாராட்டு

Congratulation

## 30.12.2020

## திருமதி விமலாதேவி கணேசன்

## (SLTS – 1)

**உப அதிபர் - யா/சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயம்**




சேவை விவரம்:

யா/சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயம்
27.11.1989 – 29.12.2020

*சேவையில் சிகரம் தொட்ட ஆசிரியை வாழ்த்துகின்றோம்*

ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் நல்வழிகாட்டியாகவும் ஆளுமை மிக்க ஆசிரியராகவும், உப அதிபராகவும், பதிலதிபராகவும் சேவையாற்றிய திருமதி விமலாதேவி கணேசன் அவர்களின் 31 வருடகால சேவைதனை பாராட்டுவதில் புளங்காகிதம் அடைகின்றோம்.

Best Wishes

மாணவருக்கு நல்வழிகாட்டியாக
ஆசிரியருக்கு கலங்கரை விளக்காக
பெற்றோருக்கு ஆலோசகராக
சமூகத்தின் விடிவெள்ளியாக
கொடுப்பதில் கொடைவள்ளலாக

Best Wishes

விளங்கும் இவர் இவ்வையகத்தில் பல்லாண்டுகாலம் தனது குடும்பத்தாருடன் நலமாக சேர்ந்து வாழ சித்தன்கேணி மகாகணபதிப் பிள்ளையாரையும். சிவனாரையும் வேண்டி நிற்கின்றோம்.

*வாழ்த்துவோர்:*

**அதிபர், ஆசிரியர், கல்விசாரா ஊழியர் நலன்புரிச்சங்கம்**
**யா/சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயம்**

## மரண அறிவித்தல்



### இராசையா சுப்பிரமணியம் (ரைவர் மணியம்)

அச்சுவேலி மேற்கு, தோப்பை பிறப்பிடமாகவும், புத்தூர் மேற்கு நவக்கிரியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சுப்பிரமணியம் (ரைவர் மணியம்) அவர்கள் 28.12.2020 அன்று திங்கட்கிழமை இயற்கை எய்தியுள்ளார்.

அன்னார், இராஜலக்சுமியின் அன்புக்கணவரும், இந்திரகுமாரி (சுவிஸ்), சிவகுமாரி (சுவிஸ்), ராஜ்குமார் (கனடா), ராஜ்மோகன், மஞ்சுளா (கனடா), நிர்மலகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும், புஸ்பராசா (சுவிஸ்), பஜேந்திரன் (சுவிஸ்-வசி), கமலாதேவி (கனடா), காந்தரூபி (கனடா), உருத்திரா, மைக்கல் ஆன்சலோ (அவுஸ்திரேலியா), உமாகாந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சுபாங்கி, உமாபிரியன், சுகன்யா, இனியவன், ஜெனாத், சுமிர்தன், ரஞ்சிதன், ரித்திக்கா, கபீசன், றஜீசன், தரணிகா ஆகியோரின் அன்புப் பேரனும், வேரனின் அன்புப் பாட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2020) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் புத்தூர் மேற்கு, நவக்கிரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, நவக்கிரி நிலாவரை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு உடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.


தொடர்புகட்கு:
இந்திரகுமாரி: +41765774513
சிவகுமாரி: +41779287665
ராஜ்குமார்: +16473889495
ராஜ்மோகன்: 0766 557 757
மஞ்சுளா: +16477160106
நிர்மலகுமாரி: 0777 901 665

தகவல்:
**மைக்கல் பிரான்சீஸ்**
+61415443804

உ
சிவமயம்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
24 ★ 09 ★ 1948



இறைவன் அடியில்
11 ★ 01 ★ 2020

### அமரர் உயர்திரு கனகரத்தினம் தவநாதன் (J.P)

(நியூ கருணாநிதி ஸ்டோர்ஸ் - கண்டி.)

**திதி : 30.12.2020**

கண்ணில் அழுகை ஓயவில்லை-எம்
கனவு வாழ்க்கை புரியவில்லை..
விழிகள் உன்னை தேடுகையில்
விழிநீர் ஆறாய் ஓடுதப்பா.!

பெற்றவர் உற்றவர் பெருமை கொள்ள பேரொளியாய் ஒளிர்ந்தாய் நீ – அன்று
உற்றவரை நேசித்து உயர்வாய் வாழ்ந்தாயே.!
பெற்றெடுத்த செல்வங்களில் பேரன்பை ஊட்டிவிட்டு – அப்பா
இன்றெம்மை தத்தளிக்க விட்டு விட்டு பறந்து விட்டாய் இறைவனிடம்..!

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும் உங்கள் பேரன்பு எங்களை விட்டு மறையாது.!
ஆயிரம் ஜென்மம் எடுத்து பிறந்தாலும் அப்பா
உங்கள் மடியில் மீண்டும் பிறக்கும் வரம் வேண்டும்.. .

வாழ்வைவென்று விட்டேனென்று வானம் நீ சென்று விட்டாய்.!
ஏங்கித்தவித்து இன்று ஓராண்டை முடித்து விட்டோம்,
நித்தமும் எம் நினைவில் நின்று கொண்டு நிஜத்தில் இறைவனுடன்
கலந்திட்ட உங்கள் ஆத்மா சாந்தியடைய எம்
கண்ணீரை மலர்களாய் காணிக்கையாக்கி பிரார்த்திக்கின்றோம்..

இவ்வண்ணம்
மனைவி – திருமதி.கனகமணி தவநாதன்
மகன்மார்: த.காண்டீபன், த.பார்த்திபன்.
மருமக்கள்: கா.கௌரி, பா.ஜீவந்தினி.
பேரப்பிள்ளைகள்: கீதன், குரு, சிவாய, அஞ்சலி

தகவல்: மனைவி, மகன்மார், சகோதரர் க.தவலிங்கம்
முகவரி: இல.292, D.S. சேனாநாயக்க வீதி, கண்டி.
தொலைபேசி: 081 2203800, 081 2225647, 077 2642320, 077 2094400, 077 9980825

நெஞ்சை விட்டு நீங்காத

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி




### தர்மலிங்கம் தர்மேந்திரன் (பாபு)

(பிரபல கட்டட ஒப்பந்தகாரரும் உரிமையாளரும் - அரியாலை)

அன்னை மடியில்
12.05.1953

ஆண்டவன் அடியில்
28.12.2012

**திதி: அபரபக்க பிரதமை**



எட்டு ஆண்டுகள் ஆகிவிட்டது அப்பா!
உங்களைப் பிரிந்த ஏக்கத்துடன் உங்கள்
வார்த்தைகள் செயல்கள் என்பவற்றுடன் வாழ்கிறோம் அப்பா!
எத்தனையோ வருடங்கள் ஆகியும் உங்கள் பெயர்
பாபு என்று ஒலித்துக்கொண்டே இருக்குது அப்பா!
உங்கள் அன்பை இன்னும் சிறிது காலம்
நாங்கள் பெற்றுக்கொள்வதற்கு முன்னே கடவுள்
- பறித்துவிட்டார்.
கடவுளை நோவதா அல்லது விதியை நினைப்பதா
என்று தெரியவில்லை அப்பா!
இன்றும் எப்போதும் எங்களுடனே இருக்கிறீர்கள்
என்ற நம்பிக்கையுடன் வாழ்கிறோம் அப்பா!
நீங்கள் வணங்கியும், தொண்டும் செய்த
சித்தி விநாயகரும், மகாமாரி அம்மனும்
உங்கள் ஆன்மா சாந்தி அடையவும்
எங்களுக்கு உறுதியாகவும் இருப்பார்கள்
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

**11, கதிரவேலு லேன், கனகரட்ணம் றோட்,**
**அரியாலை, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

## தவிசாளர்...

என்பதில் பெரும் இழுபறி நிலைமை காணப்படுகின்றது. உறுப்பினர் மதுசுதனை தவிசாளராக நிறுத்த வேண்டும் என்று ரெலோ ஒற்றைக்காலில் நிற்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை.
இந்த விடயம் ஆராயப்பட்டபோது, கோப்பாய் தவிசாளர் உடனடியாகப் பதவி விலகுவார் என்றும், நல்லூர் பிரதேச சபை தவிசாளர் பதவி மதுசுதனுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் டீல் பேசப்பட்டுள்ளது. அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதலில் மறுத்துள்ளது. கோப்பாய் பிரதேச சபைத் தவிசாளர் தி.நிரோஷ் மீது எந்தக் குற்றச்சாட்டும் இல்லாத நிலையில் அவர் பதவி விலகத் தேவையில்லை, நல்லூரை நாம் வைத்திருக்கின்றோம் என்று கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. ஆனால் ரெலோ தரப்பு அதை ஏற்பவில்லை.
அதையடுத்து கூட்டமைப்பும் இந்த டீலுக்கு ஒப்புக் கொண்டுள்ளது என்று தெரியவருகின்றது. அதனால் கோப்பாய் பிரதேச சபைத் தவிசாளர் தி.நிரோஷ் எதிர்வரும் ஜனவரி மாதம் 10ஆம் திகதி யளவில் பதவி விலகுவார் என்று கூறப்படுகின்றது. (எ-இ)

**PERSONAL CLASS**
தரம்: 3 முதல் O/L வரையான மாணவர்களுக்கு அனைத்து பாடங்களும் &A/L மாணவர்களுக்கு பௌதீகவியல், பொருளியல், வணிகக்கல்வி உட்பட அனைத்து பாடங்களும் கற்பிக்கப்படும்
074 040 6351

யாழ்/சித்தன்கேணி சிறி கணேசா வித்தியாலயம்
அகவை அறுபதில் சேவைநலன் பாராட்டு
30.12.2020
திருமதி விமலாதேவி கணேசன்
(உப அதிபர், யாழ்/சித்தன்கேணி சிறி கணேசா வித்தியாலயம்)



சிறந்த ஆளுமை மிக்க ஆசிரியை ஸ்ரீ மகாகணபதிப் பிளையாரினதும், சிவசிதம்பரேஸ்வர சிவகாமி அம்மை சமேதர்களின் அருள் ஆசியுடன் இவர் வையகத்தில் நலமுடன் பல்லாண்டு காலம் தனது குடும்பத்துடன் சேர்ந்து வாழ வேண்டி நிற்கின்றோம்.
வாழ்த்துவோர்:
திருமதி ஜெகஜோதி நவரட்ணசிங்கம்
திரு.திருமதி இராஜசந்திரன் குடும்பம்
திரு.திருமதி ஜெயசந்திரன் குடும்பம்
திரு.திருமதி லிங்கமயம் குடும்பம்
"ராம்ராஜ்" சித்தன்கேணி

## உதயனுக்கு....

ணம் பொலிஸாரால், நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையிலேயே மாவை சேனாதிராஜா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
அவரது கண்டன அறிக்கையில் உள்ளதாவது:
உதயன் பத்திரிகை வரலாற்றில் பல முறை வன்முறைகளுக்கு உள்ளானது. பத்திரிகை நிறுவனத்தையே தீ மூட்டி எரித்தனர். பத்திரிகையாளர்களைக் கொன்றனர். போர்க்காலத்திலும் எத்தனையோ தடவைகள் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கினர். ஆனால் உதயன் பத்திரிகை அர்ப்பணிப்புடன் துணிச்சலுடன் செய்திகளைத் தொடர்ச்சியாக வெளியிட்டு நீதியை நிலைநாட்டியிருக்கிறது என்பது சாதனையே.
ஊடகத்துறையில் இன்றைய அரசு சர்வாதிகாரத்தனமாக அடக்குமுறை நடவடிக்கைகளை பத்திரிகைக்கு எதிரான வழக்குகளைப் போட்டு அச்சுறுத்துவது ஆச்சரியமானதல்ல. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் புகைப்படத்தை வெளியிடுவது குற்றமென்றால் 2002ஆம் ஆண்டுகளில் போர் நிறுத்தம் செய்து, கையெழுத்திட்டு அன்றைய அரசும் விடுதலைப்புலிகளுடன் நோர்வே ஒஸ்லோ வரையிலும் பேச்சில் ஈடுபட்டமையை நினைவுபடுத்த வேண்டும். அவ்வாறான அரசு ஊடக சுதந்திரத்தை மறுத்து நிற்பது ஜனநாயக விரோதமானது.
ஏற்கனவே ஜனநாயக சக்திகள் வேறுபாடின்றி அரசியலில் தலைவர்கள், அமைப்புக்கள் உதயன் பத்திரிகைக்கு எதிரான, ஜனநாயக அடக்குமுறைக்கு எதிராகக் கண்டனம் தெரிவித்துள்ளமையை வரவேற்கவேண்டும். இப்போதைய அரசு உதயன் பத்திரிகைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தமையைக் கண்டிக்கின்றோம். அந்த வழக்கைத் திருப்பிப் பெற வேண்டுமென அரசை வற்புறுத்துகின்றோம். அந்த வழக்கில் உதயன் பத்திரிகை வெற்றிபெறும் எனவும் நம்புகின்றோம் என்றுள்ளது. (ம)

## அருவியாற்றில்...

காணாமல் போனவரைத் தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டாலும், நேற்று இரவுவரை அவர் கண்டுபிடிக்கப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.
மன்னார் சூரியகட்டைக்காடு கிராமத்தைச் சேர்ந்தவரும் நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள தோமாஸ்புரி கிராம அலுவலராகப் பணியாற்றுபவருமான ஜனார்த்தனன் (வயது26) என்பவரே காணாமல்போயுள்ளார்.
நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவில் கடமையாற்றும் நான்கு கிராம அலுவலர்களும் மற்றும் ஒரு வியாபாரியுமாக ஐந்து பேர் அருவியாற்றுப் பாலத்தடியில் உணவு சமைத்து உண்டுள்ளனர். அவர்கள் ஆற்றில் குளிப்பதற்காக இறங்கிய போது சுழிக்குள் இழுக்கப்பட்டுள்ளனர். அவர்களை மீட்க இன்னொரு கிராம அலுவலர் முயற்சித்தார். மூன்று பேரையே கரையேற்ற முடிந்தது. மற்றைய கிராம அலுவலரை மீட்க முடியாமல் போய்விட்டது என்று ஆரம்ப விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
மீட்கப்பட்ட ஏனைய மூவரும் மன்னார் மருத்துவனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
தற்போது அந்த ஆற்றில் நீர் வரத்து அதிகமாகவுள்ளது. அந்த ஆற்றில் முதலைகளும் அதிகம் உள்ளதால், காணாமல் போனவரைத் தேடும் நடவடிக்கைகள் படகு மூலமாகவே முன்னெடுக்கப்பட்டது.
தற்போது மழையுடன் கூடிய காலநிலை நிலவுவதால், மல்வத்து ஓயாவிலிருந்து நீர்வரத்து அதிகரித்துள்ளது. கட்டுக்கரை குளமும் நிரம்பியுள்ளது. அருவியாற்றின் மூலம் தண்ணீர் கட்டுக்கரைக் குளத்துக்கு வருவது தடை செய்யப்பட்டு, கடலுக்குத் திருப்பப்பட்டுள்ளது. அருவியாற்றில் குளிப்பது ஆபத்தானது என்று நானாட்டான் பிரதேச சபை அறிவித்து, எச்சரிக்கைப் பலகையும் அங்கு வைத்துள்ளது.
(சு-213.60)

# மரண அறிவித்தல்

## நாகேந்திரசர்மா சுவர்ணலட்சுமி



பிறப்பு: 26.06.1946 இறப்பு: 29.12.2020

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், எழுதுமட்டுவாழினை வாழ்விடமாகவும் தற்போது சுன்னாகம் உடுவில் தொம்பை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் நாகேந்திரசர்மா சுவர்ணலட்சுமி அவர்கள் நேற்று (29.12.2020) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற சதாசிவஐயர், அனந்தலட்சுமி அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தசாமிஐயர், இராசம்மா அவர்களின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற நாகேந்திரசர்மாவின் அன்பு மனைவியும், சுரேந்திரக் குருக்கள் (பிரதம குரு- கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரம்) சுதாகரக்குருக்கள் (மலேசியா) குகனேசக்குருக்கள் (எழுதுமட்டுவாழ் பெரிய கேணிப் பிள்ளையார்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுபாசினி (கொழும்பு) சுபாசினி (மலேசியா) அனுஷா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ராகுலன், அமரர் பிரவீன், காவியா, நிதுசினி, ஸ்ரீவஸ்யன், ஸ்ரீகீரன், யுகானா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2020) புதன் கிழமை நண்பகல் 12.00 மணிக்கு உடுவில் தொம்பை வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டு, சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக அஞ்சலி செலுத்துவதற்கு வருகைதருமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
குகனேச குருக்கள் - 077 9691426
0212240160
சுரேந்திர குருக்கள் - 077 5930 517
சுதாகர குருக்கள் - +60168999371

தகவல்:
குடும்பத்தினர்.
தொம்பை வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்

## யாழில்...

கொரோனாத் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 6 பேரும், தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2 பேரும் கொரோனா தொற்றுக்கு இலக்காகியுள்ளனர்.

இவர்கள் மருதனார்மடம் சந்தையுடன் தொடர்புடைய தொற்றாளர்களின் குடும்ப உறுப்பினர்கள் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இவர்கள் தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்கள் என்றும், இவர்களுக்கு இரண்டாவது தடவையாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. இவர்களுடன் சேர்த்து மருதனார்மடம் கொரோனாக் கொத்தணியால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 118 ஆக உயர்ந்துள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில் நேற்று 410 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 8 பேருக்கே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களை விட முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் நிலையத்தில் உள்ள 5 பேருக்கும், கிளிநொச்சி தனிமைப்படுத்தல் நிலையத்தில் உள்ள ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ-26)

## நல்லூர்...

தெரியப்படுத்த வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரியவருகின்றது. நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் தெரிவு இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் வரவுசெலவுத் திட்டம் இரு தடவைகள் தோற்கடிக்கப்பட்டதை அடுத்து அதன் தவிசாளராக இருந்த தியாகமூர்த்தி பதவி இழந்தார். அதையடுத்து தவிசாளர் தெரிவுக்கு யாரை நிறுத்துவது என்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆராய்ந்து வந்தது. இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளும் கருத்துக்களை முன்வைத்திருந்தன.

இந்த விடயத்தில் பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் முன்வைக்கப்பட்டிருந்த நிலையில், தவிசாளர் தெரிவுக்கு யாரை நிறுத்துவது என்பதைத் தீர்மானிக்கும் கூட்டம் யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் பிரதிநிதிகள், நல்லூர் பிரதேச சபை உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

அந்தக் கூட்டத்தில் ரெலோ கட்சி மதுசூதனனை தவிசாளர் தெரிவுக்கு நிறுத்த வேண்டும் என்று இறுக்கமாக நின்றது. எனினும் இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். மதுசூதனனின் கடந்த கால சபை நடவடிக்கைகள் தொடர்பாக அவர்கள் அதிருப்தி வெளியிட்டனர் என்று அறிய முடிந்தது.

எனினும் ரெலோ தனது பிடியில் இறுக்கமாக இருந்ததை அடுத்து, மதுசூதனன் தனக்குரிய ஆதரவை இன்று காலை தெரியப்படுத்த வேண்டும் என்றும், அதன்பின்னர் இறுதியாக முடிவெடுக்கலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது என்றும் அறிய முடிகின்றது. (எ-26)

## தனிப்...

னைகளில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்த தனிப்பிராந்தியமாக இருக்க வேண்டும் என்ற யோசனையை அரசு தூக்கிக் குப்பையில் வீச வேண்டும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும் உள்ளூராட்சி சபைகள் மற்றும் மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சருமான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

கூட்டமைப்பின் யோசனைகளில் எதுவும் முழுமையாக ஏற்றுக்கொள்ளக்கூடிய யோசனை அல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிய அரசமைப்பில் மத்திய மற்றும் பிராந்தியங்களின் ஐக்கியத்தைக் கொண்டதாக அரசு முறைமை அமைய வேண்டும். அதில் ஒரு பிராந்தியமாக தமிழ் பேசும் மக்களின் பிரதான வாழிடமான வடக்கு கிழக்கு இருத்தல் வேண்டும் என்று புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நிபுணர்கள் குழுவுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமர்ப்பித்துள்ள யோசனைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த போதே சரத் வீரசேகர மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

தமிழீழ விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்டாலும் அவர்களை உயிர்ப்பிக்கும் வகையிலும், அவர்களின் கனவை நனவாக்கும் வகையிலுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றனர்.

மாகாண சபை முறைமை மூலம் தனி இராஜ்ஜியத்தை நடத்தலாம் என்ற எண்ணத்துடனேயே கூட்டமைப்பினர் உள்ளனர். அதிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் தாயக பூமி என்ற மமதையுடனும், அந்த இரு மாகாணங்களையும் இணைக்க வேண்டும் என்ற நப்பாசையுடனும் கூட்டமைப்பினர் உள்ளனர்.

இதன்காரணமாகவே மாகாண சபை முறைமைக்கு முடிவுகட்ட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நான் உறுதியாக உள்ளேன். அதுதான் மாகாண சபைத் தேர்தல் வேண்டாம் என்று வலியுறுத்தி வருகின்றேன்என்றார். (எ-22)

## ஆனோல்ட்...

தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் வி.மணிவண்ணனும் முதல்வர் பதவிக்குப் போட்டியிடுகின்றார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் வரவு செலவுத் திட்டம் இரு தடவைகள் தோற்கடிக்கப்பட்டதை அடுத்து, முதல்வராகப் பதவி விகித்த இ.ஆனோல்ட் பதவி இழந்தார். அதையடுத்து முதல்வர் வேட்பாளராக யாரை நிறுத்துவது என்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பரிசீலித்து வந்தது. இ.ஆனோல்ட் மீண்டும் முதல்வர் பதவிக்காக நிறுத்தப்பட்டால் அவரை எதிர்ப்போம் என்று சபையில் உள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியும் அறிவித்திருந்தன.

இந்த விடயத்தில் இறுதித் தீர்மானத்தை எட்டுவதற்காக யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் நேற்றுக் கூட்டம் ஒன்று இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா தலைமையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ப.கஜதீபன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள் என பலர் கலந்துகொண்டிருந்தனர். இந்தக் கூட்டத்தில் மீண்டும் மாநகர முதல்வர் வேட்பாளராக ஆனோல்டை நிறுத்துவது எனத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டு சில மணிநேரத்தில் முதல்வர் பதவிக்கு வி.மணிவண்ணனும் போட்டியிடுகின்றார் என்ற தகவல் வெளியானது.

நேற்று இரவு சபை உறுப்பினர்கள் சிலருடனும், ஆதரவாளர்களுடனும் கலந்தாலோசித்த பின்னர் மணிவண்ணன் இந்த முடிவை எடுத்துள்ளார்.

மீண்டும் இ.ஆனோல்ட் போட்டியிடுவதால் சபை கலையக் கூடிய சந்தர்ப்பங்கள் உள்ளன என்றும், சபையில் நிலையான ஆட்சி ஒன்றை உருவாக்கும் நோக்குடன் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும் வி.மணிவண்ணன் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வர் தெரிவு இன்று காலை ஒன்பது மணிக்கு நடைபெற்றவுள்ளது. முன்னதாக முதல்வர் தெரிவு நடந்தபோதும், வி.மணிவண்ணன் முதல்வர் பதவிக்குப் போட்டியிட்டிருந்தார். எனினும் இ.ஆனோல்ட் வெற்றி பெற்று முதல்வராகியிருந்தார். தற்போது இ.ஆனோல்ட்டை ஆதரிக்க முடியாது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி என்பன அறிவித்திருக்கின்றன. இந்தநிலையில் இன்று நடைபெறவுள்ள முதல்வர் தெரிவு தொடர்பில் பலத்த எதிர்பார்ப்பு நிலவுகின்றது. (எ-26)

## அரசமைப்பு...

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

ஆனாலும், புதிய அரசமைப்பு தொடர்பாக அரசின் வெளிப்பாடுகள் எமக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர் மௌனிக்கப்பட்டதன் பின்னரான சூழலில் தற்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் சகோதரரான பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த தருணத்தில் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்ட ஏற்பாடுகளுக்கு அப்பால் சென்று அதிகாரங்களைப் பகிர்ந்தளித்து இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வை வழங்குவேன் என்று இந்தியாவுக்கும் சர்வதேசத்துக்கும் வாக்குறுதி வழங்கியிருந்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளராக இருந்த யசூசி அகாசி இலங்கைக்கு வந்த தருணத்திலும் அவர் அவ்விதமான வாக்குறுதியை வழங்கியிருக்கின்றார். அதுமட்டுமல்லாது எம்முடன் நடைபெற்ற சந்திப்புக்களின்போதும் அந்த விடயம் சம்பந்தமாகப் பேசியிருக்கின்றார்.

ஆகவே, நாட்டின் இனப்பிரச்சினையொன்று இருக்கின்றது. தமிழ் மக்களும் ஐக்கிய இலங்கைக்குள் சமத்துவமாக - பாதுகாப்பாக -அமைதியாக வாழுவதற்குரிய வகையிலான வழிவகைகள் அரசமைப்பு ரீதியாக மீளப் பெறாதவாறு, உறுதியானவாறு மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது என்பதை அவர் ஏற்றுக்கொண்டிருக்கின்றார்.

துரதிர்ஷ்டவசமாக அவர் ஏற்றுக்கொண்ட, இந்தியாவுக்கும் சர்வதேசத்துக்கும் வழங்கிய வாக்குறுதிகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இப்போது அவர் மீண்டும் ஆட்சி அதிகாரத்தில் இருக்கின்றார். அவருடைய சகோதரர் கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருக்கின்றார்.

தற்போது அவர்கள் புதிய அரசமைப்புக்கான நிபுணர் குழுவொன்றை நியமித்திருக்கின்றார்கள். அந்தக் குழு அனைத்துத் தரப்பினரிடத்திலும் கருத்துக்களை கோரியுள்ளது. அந்தக் குழுவின் கோரிக்கைக்கு அமைவாக நாம் கூட்டமைப்பாக எமது முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ளோம்.

இந்த முன்மொழிவுகள் தமிழ்த் தேசியத்தின் அடிப்படைக் கோட்பாடுகளிலிருந்து விலகாதவாறும் எமது மக்களின் அபிலாஷைகளைப் பெற்றுக்கொடுக்கும் வகையிலும் அமைந்துள்ளன.

தற்போது ஆட்சியில் அமர்ந்துள்ள அரசு புதிய அரசமைப்புப் பணிகளை முன்னெடுக்கின்றமை வரவேற்கத்தக்கதாக இருந்தாலும் அரசின் முக்கிய தரப்பினர்கள் வெளிப்படுத்தி வரும் கருத்துக்கள் கவலை அளிப்பதாக உள்ளன. அவை எமக்கு நம்பிக்கை அளிப்பதாக இருக்கவில்லை.

எடுக்கப்படுகின்ற முயற்சிகளை நாம் முழுமையாக ஒதுக்காது நாங்களாகவே அந்தக் கருமத்தைத் தவிர்த்தவர்கள் என்ற குற்றச்சாட்டுகளுக்கு இடமளிக்காது எமது கடமைகளை முன்னெடுத்துள்ளோம்.

இந்தப் பணிகள் இதயசுத்தியுடன் இந்த நாட்டின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு நியாயமான முறையில் இடம்பெற வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாக உள்ளதுஎன்றார். (எ-22)

## மாகாண சபை...

பௌத்த பிக்குகளும் வலியுறுத்திவரும் நிலையில், அந்த முறைமையைத் தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்வதற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அமைச்சர்களான வாசுவேத நாணயக்கார, எஸ்.எம்.சந்திரசேன, காமினி லொக்குகே ஆகியோர் இந்த தகவலை உறுதிப்படுத்தினர். எனினும் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தும் திகதி இன்னும் தீர்மானிக்கப்படவில்லை எனவும் அவர்கள் கூறினர்.

ஆளுங்கட்சியின் உயர்மட்டக் கூட்டமொன்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் நேற்றுமுன்தினம் இரவு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. ஆளுங்கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக்கட்சிகளின் தலைவர்களும், பிரதிநிதிகளும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.

அதில் மாகாண சபைகளுக்கான தேர்தல் தொடர்பிலும், அது நடத்தப்படவேண்டிய காலப்பகுதி குறித்தும் விரிவாக ஆராயப்பட்டன. ஆளுங்கட்சிப் பிரமுகர்களால் இது தொடர்பில் பலகோணங்களில் கருத்துகள் முன்வைக்கப்பட்டன. இறுதியில் தற்போதைய சூழ்நிலையில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதில்லை எனவும், கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்படுத்தப்பட்ட பின்னரே அதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படவேண்டும் எனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

பழைய முறைப்படி மாகாணசபைத் தேர்தலை நடத்துவதா அல்லது புதிய அரசமைப்பு இயற்றப்பட்ட பின்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதா என்பது பற்றியும் கருத்தாடல்கள் இடம்பெற்றாலும், அது தொடர்பாக இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. எனினும், மாகாணசபை முறைமை தொடரவேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

'மாகாணசபை முறைமை அவசியம் என்பது கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தேர்தல் திகதி குறித்து முடிவு இல்லை. எதிர்காலத்தில் நிச்சயம் அது நடத்தப்படும்' என்று இந்தச் சந்திப்பின் பின்னர் அமைச்சர்எஸ்.எம்.சந்திரசேனதெரிவித்தார்.

'மாகாணசபை முறைமை தொடரவேண்டும் என இணக்கம் காணப்பட்டது. ஜனாதிபதியும் இதே நிலைப்பாட்டில்தான் இருக்கின்றார். தேர்தலுக்கான காலப்பகுதியை நாட்டு சூழ்நிலையே தீர்மானிக்கும்' என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டார். (ம-44)

# ஆஸியை வீழ்த்தியது இந்தியா

புதுடில்லி, டிசெ.30

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் தொடரில் இந்திய அணி 8 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஆஸ்திரேலியா இந்தியா அணிகளுக்கு இடையிலான 2 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மெல்போர்னில் நடைபெற்றது. இந்த டெஸ்ட் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற ஆஸ்திரேலியா அணி துடுப்பெடுத்தாடியது. முதல் இன்னிங்ஸில் 195 ஓட்டங்களில் சுருண்டது ஆஸ்திரேலிய அணி.

முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 115.1 பந்துப்பரிமாற்றங்களில் 326 ஓட்டங்கள் குவித்தது. ஆஸ்திரேலிய அணியை விட இந்திய அணி 131 ஓட்டங்கள் முன்னிலை பெற்றிருந்தது.

இரண்டாவது இன்னிஸ்ஸில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணியின் துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்கவில்லை. மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் ஆஸ்திரேலியா அணி 6 இலக்குகளை இழந்து 133 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நான்காம் நாள் ஆட்டம் நேற்று ஆரம்பமானது. 22 ஓட்டங்கள் எடுத்த நிலையில் கம்மின்ஸ் ஆட்டமிழந்தார். இறுதியில், ஆஸ்திரேலியா அணி 200 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

இதையடுத்து, 70 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி களமிறங்கியது. தொடக்க வீரர்களாக மயங்க் அகர்வால் மற்றும் ஷுக்மன் கில் ஆகியோர் களமிறங்கினர். 5 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஸ்டார்க் பந்துவீச்சில் அகர்வால் ஆட்டமிழந்தார். அடுத்துவந்த புஜாரா 3 ஓட்டங்கள் எடுத்த நிலையில் கம்மின்ஸ் பந்துவீச்சில் வெளியேறினார். இந்திய அணி 19 ஓட்டங்களுக்குள் 2 இலக்குகளை இழந்து தடுமாறியது. அடுத்துவந்த அணித் தலைவர் ரஹானே, ஷுக்மன் கில்லுடன் ஜோடி சேர்ந்து பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இறுதியில் 15.5 பந்துப்பரிமாற்றங்களில் 70 ஓட்டங்களை எட்டிய இந்திய அணி ஆஸ்திரேலியாவை 8 இலக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றி பெற்றது. (ந-இ)

## புத்தர் சிலை மீது மீண்டும் தாக்குதல்

கொழும்பு, டிசெ. 30

மாவனெல்ல, ஹிகுல பகுதியில் உள்ள புத்தர் சிலை மீண்டும் தாக்கப்பட்டுள்ளது. சிலை வைக்கப்பட்டிருந்த கண்ணாடி அறை மீது நேற்றுமுன்தினம் இரவு ஒரு குழு தாக்குதல் நடத்தியுள்ளது என்றும் விசாரணை நடத்தப்படுகின்றது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சிலை 2018 டிசெம்பரிலும் தாக்கப்பட்டிருந்தது. சஹ்ரான் குழுவே முன்னர் தாக்கியிருந்தது என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (த-இ)

## 117 வயதான மூதாட்டி சாவு

கொழும்பு, டிசெ. 30

இலங்கையில் அதிகளவு வயது முதிர்ந்த மூதாட்டி நேற்று உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

களுத்துறை தொடங்கொட பகுதியைச் சேர்ந்தவரே உயிரிழந்தார். அவருக்கு வயது 117 என்று தெரிவிக்கப்பட்டது. (த)

A/L வரலாறு
ONLINE CLASSES

சாதனை மிக்க பெறுபேறுகளை தொடர்ச்சியாக பெற்றுத்தரும் உங்கள் ஆசான் {M. பத்மன் B.A (Hons) His, P.G.D.E M.A (Hons) History}

கடந்த சித்திரை மாதம் முதலே Online Classes நடைபெறுகிறது. மூன்று வெவ்வேறு நிறுவனங்களில் online மூலம் கற்பிக்கப்படுகிறது. நீங்கள் எந்தக் குழுவிலும் இணைந்து படிக்கலாம்

| நிறுவனங்கள் | இணையவழி (App) | தொடர்புகொள்ள வேண்டிய இலக்கங்கள் |
|---|---|---|
| 1. D.M.I | Team link(App) | 0778480604 |
| 2. ஆர்வம் | Zoom(App) | 0774696540 |
| 3. முயற்சி | Zoom(App) | 0773460397 |

- இலங்கை முழுவதிலிருந்தும் மாணவர்கள் கற்கின்றனர்.
- புதிதாக இணைவோருக்கு ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்.
- A/L 2021,2022 ஆகிய இரு பிரிவினருக்கும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
- கடந்த காலங்களைப் போன்றே வறிய மாணவர்களுக்கான இலவச அனுமதியும் இதில் உண்டு.
- M.C.Q பயிற்சி, படவேலை, பயிற்சி பரீட்சைகளும் நடைபெறுகின்றன.

"சாதனை படைக்க இணைவோம்"

தேவை

தனியார் நிறுவனம் ஒன்றில் முகாமையாளராக பணியாற்ற வணிக முகாமைத்துவம் பயின்ற பெண் தேவை. ஆங்கில மொழியுடன் சிங்கள மொழி பரீட்சையம் அவசியம்.

தொ.இல: 074 137 4492

அகரம்
உயர் நிலைக் கல்லூரி
கொக்குவில் மல்லாகம்

தரம் 06 - O/L வரையான
[தமிழ், ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் நடைபெறுகின்றன.]

புதிய கல்வியாண்டு – 2021
30.12.2020
காலை 6 மணி முதல் 9 மணி வரையான புண்ணிய காலத்தில் ஆரம்பமாகின்றது

குறிப்பு
தற்போதைய கோவிட் – 19 சூழ்நிலையை கருத்திற் கொண்டு zoom மூலமே வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

"அகரம் எம் தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"

நன்றி அகரம் நிர்வாகம்

றோயல் அக்கடமி
ROYAL ACADEMY
யாழ்ப்பாணம். நல்லூர்.

புதிய கல்வியாண்டு-2021

தரம் 6
• தமிழ் மொழிமூலம்
• English Medium
ZOOM Class

ஆரம்பம்: 04.01.2021
திங்கட்கிழமை

➡ பெற்றோர் எமது இரு நிறுவனங்களிலும் 01.01.2021 (வெள்ளிக்கிழமை) காலை 8.00 மணி முதல் கட்டணம் செலுத்தி அனுமதியை பெற்றுக்கொள்ளவும்.
➡ ஏனைய வகுப்புகளிற்கும் புதிய அனுமதிகள் வழங்கப்படும் (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

- நிர்வாகி-

2020 க.பொ.த.(சா/த) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள்
**வெற்றிக்கனியைப் பறிக்க உதவும் ஏணிப்படி....!**
மாணவர் சுயமாகவே பயிற்சியை மேற்கொள்ள உதவும் படி...!

வெற்றிப்படி

தமிழ் | கணிதம் | விஞ்ஞானம் | சமூகக்கல்வி | ஆங்கிலம்

ஆகிய பாடங்களின் எதிர்பார்க்கை வினாக்கள்-விடைகள்




யாழ்.மாவட்ட பிரபல ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்களின் தொகுப்பு

அனைத்து புத்தகசாலைகள் மற்றும் எமது முகவர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

வெற்றிப்படி பிரதிகளை
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
" வெண்பா " புத்தக நிலையம் (20A, கல்லூரி வீதி.யாழ்ப்பாணம்.
T.P: 021 322 5090 யாழ். இந்துக் கல்லூரி மைதானத்திற்கு முன்பாகவும்). வெண்பா இணையத்தளத்திலும்
(Online Purchase) பெற்றுக்கொள்ளலாம்.
www.venpaa.lk

மேலதிக தொடர்புக்கு: 077 656 9617, 021 493 2222

உதயன் வெளியீடு



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.12.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.